விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 கார்த்திகை 19 ர: ஆகிர் 2 இதழ் 297

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 5 12-1986

தமிழக ரயில் நிலையத்தில் குண்டுவெடிப்பு

## 5 சிங்களவர் உட்பட 9 பேர் பொலிஸாரால் கைது!

மூவர் பெண்கள்

### ஒருவர் முன்னாள் பொலிஸ் அதிகாரி

சென்னை, டிச 4

மதுரை அழகப்பா ரயில் நிலையத்தில் அண்மையில் குண்டு வெடித்தது தொடர்பாக 5 சிங்களவர் உட்பட 9 பேரைத் தமிழக பொலிஸார் கைது செய்துள்ளனர். இத்தகவலை தமிழக பத்திரிகையான 'முரசு' தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டோரில் 3 பெண்களும் அடங்கியுள்ளனர் எனத் தெரியவருகிறது. ஏனைய 6 பேரில் ஒருவர் ரணசிங்க என்ற சிங்கள ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரி எனப் பொலிஸ் வட்டாரங்களை ஆதாரம் காட்டி இப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட 9பேரும் மதுரை கே கே நகரிலுள்ள பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டு விஷேச குற்றப் புலனாய்வுத் துறையினரால் தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டிருப்பதாகவும் இப் பத்திரிகை தெரிவித்துள்ளது. (ஊ)

வடபகுதி விஜயம் மேற்கொண்ட—

# 'விஜே' குழு மீதான தடை நீக்கம்

# இன்று மாலை யாழ். வருவர்

(வவனியா நிருபர்)

**விடுதலைப் புலிகளினால் கைதுசெய்யப்பட்ட சிப்பாய்களின் விடுதலை தொடர்பாக ஸ்ரீலங்கா மக்கள்கட்சி தலைவர் விஜயகுமாரணதுங்க தலைமையிலான 70பேர் கொண்டகுழு இன்று மாலை யாழ். வந்தடையவுள்ளது.**

**இக்குழு அனுராதபுரத்துக்கு வடக்கே பயணம் செய்யக்கூடாதென முன்னர் விதிக்கப்பட்டிருந்த தடை நேற்று நீக்கப்பட்டதையடுத்து இவர்கள் இன்றுகாலை அங்கிருந்து புறப்படுகிறார்கள்.**

திரு. குமாரணதுங்காவுடன் உட்பட 39 பதகுருமார், ஒரு மகாநாயக்கா தேரர், சிப்பாய்களின் உறவினர்கள் பன்னிரெண்டு பேர், பத்திரிகையாளர் எழுபதுபேர் புதன் மாலை கொழும்பிலிருந்து புறப்பட்டு அனுராதபுரத்திலுள்ள சாரா பிரிவெனயில் தங்கியிருந்தனர்.

### இராணுவ அதிகாரி தடை

அன்றிரவு இக்குழுவினருடன்

(5ம் பக்கம் பார்க்க)

கொம்மாந்துறையில்

## சர்வோதய தொண்டர்கள்மீது அதிரடிப்படையினர் சூடு

### இருவர் காயம்

மட்டக்களப்பு விபா

கொம்மாந்துறையிலுள்ள சர்வோதய பாலர் பாடசாலை வளவில் சர்வோதய தொண்டர்கள் சிரமதானப்பணியில் ஈடுபட்டிருந்தபோது அங்கு திடீரெனவந்த அதிரடிப்படையினர் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டதில் இருதொண்டர்கள் காயமடைந்தனர். இ. போ. ச. பஸ் ஒன்றில் பிரயாணிகள் போல் ஏறிவந்த அதிரடிப்படையினரே இச்செயலை மேற்கொண்டதாகக் கூறப்படுகிறது.

காயமடைந்தோர் விபரம்: செங்கலடி பிரதேச சர்வோதய இணைப்பாளர் எஸ். சந்

[5ம் பக்கம் பார்க்க]

## ஆனையிறவைக் கடந்ததும் புலிகள் அழைத்துவருவர்

(அலுவலக நிருபர்)

யாழ்ப்பாணம் நோக்கி இன்று வரவிருக்கும் விஜயகுமாரணதுங்க குழுவினர் ஆனையிறவைக் கடந்து வந்ததும் அங்கிருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் பாதுகாப்புடன் அழைத்து வருவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியாவிலிருந்து புறப்படும் விஜே குழுவினர், இன்று நண்பகலுக்குப் பின்னர் ஆனையிறவூடாக யாழ்ப்பாணம் வந்து சேருவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இக்குழுவினர் யாழ். நகரிலுள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் தங்குவதற்கு சகல ஏற்பாடுகளும் விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தக் ஹோட்டலில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் குடாநாட்

(5-ம் பக்கம் பார்க்க)

## "வடக்கில் சிங்கள மக்களுக்கு போராளிகளால் ஆபத்தேற்படாது"

—வவனியா பிரதம பிக்கு

ரி விவேகராசா)

"சிங்கள மக்கள் வடபகுதிக்கு போவதால், அங்குள்ள தமிழ்ப் போராளிகளால் அவர்களுக்கு பாதிப்பு எதுவும் ஏற்படாது, ஆனால் வடபகுதிக்கு சிங்களவர்களாகிய எம்மைச் செல்லவிடாது அரசாங்கம் தடுப்பது ஆச்சரியப்

[5ம் பக்கம் பார்க்க]

தமிழ் மக்களின் இன்னல் குறித்து விளக்க

## தமிழ்ப்பகுதி பிரஜைகள் குழு தலைவர்கள் டிக்ஸிற்றை சந்திப்பர்

மட்டக்களப்பு, வியா.

தமிழ்ப் பிரதேசங்களில் வாழும் மக்கள், ஆயுதப்படையினரின் இன்னல்களுக்காளாவது குறித்து புகார் செய்வதற்காக வடக்கு, கிழக்குபகுதி பிரஜைகள் குழுக்களின் தலைவர்கள் இந்தியத் தூதுவர் திரு ஜே. என். டிக்ஷிற்றை விரைவில சந்திக்கவுள்ளனர்.

யாழ். பிரஜைகள்குழுத் தலைவர் பேராசிரியர் கா சிவத்தம்பி இச்சந்திப்புக்கு தம்மை ஆயத்தப்படுத்தும்படி ஏனைய பிரஜைகள் குழுக்களின் தலைவர்களைக் கேட்டுக்கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இச்சந்திப்பு சம்பந்தமான ஆயத்தங்களை மேற்கொள்வதற்காக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட பிரஜைகள் குழுக்களின் ஆலோசனைக் கூட்டமொன்று மட்டக்களப்பு கத்தோலிக்க கழக கட்டடத்தில் இன்று நடைபெற்றது. (ஊ)

## புல்லுமலை முகா முக்கு ரணதுங்க விஜயம்

மட்டக்களப்பு வியா.

பெரியபுல்லுமலை ராணுவ முகாமை மக்கள் நடமாற்ற பகுதிக்கு மாற்றும்படி மட்டு பிரஜைகள் குழுச் செயலாளர் திரு சாம். தம்பிமுத்து விடுத்தவேண்டுகோளைப் பற்றி பரிசீலனை செய்வதற்காக கூட்டுப் படைகளின் தளபதி ஜெனரல் சிறில்ரணதுங்க அம்முகாமுக்கு விஜயமொன்றினை மேற்கொள்ளவுளளார்.

(5-ம் பக்கம் பார்க்க)

4,40000 மாணவர்கள் தோற்றும்

## ஜி. சி. ஈ. சாதாரணதர பரீட்சை இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், வெள்ளி

ஜி சி ஈ சாதாரணதரப் பரீட்சை இன்று ஆரம்பமாகிறது இப் பரீட்சைக்கு இம்முறை 4 லட்சத்து 40 ஆயிரம் மாணவர்கள் தோற்றுகின்றார்கள்.

யாழ். மாவட்டத்தில் மட்டும் சுமார் 40 ஆயிரம் மாணவர் இம்முறை இப்பரீட்சைக்கு தோற்றுகிறார்கள். இவர்களுக்காக 189 பரீட்சை நிலையங்களும் 27 பரீட்சை

(5-ம பக்கம் பார்க்க)

ஹப்பி ரெக்ஸ்ற்

கிளை நிறுவனம்

இடமாற்றம்

வாடிக்கையாளர்களின் பாதுகாப்பையும் நன்மையையும்கருதி 1-ம் கட்டிடம் நவீனசந்தைமேல் மாடியில் உள்ள எமது கிளை 05-12-86 தொடக்கம் ஸ்ரான்லி ரேட்டிற்கு [V. K. ராஜரட்ணத்திற்கு நேர் முன்பாகவும், விக்ரர் அன்சன்ஸிற்கு அருகிலும்] இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

ஹப்பி ரெக்ஸ்ற்

இல. 104, ஸ்ரான்லி ரேட், யாழ்ப்பாணம்.

(C-6144)

சபாநாயகர் கலரியிலிருந்து குறிப்பெடுத்த

## இஸ்ரேல் அதிகாரிகள் வருத்தம் தெரிவித்து கடிதம் எழுதினர் - சபாநாயகர்

கொழும்பு, வியா.

"வெளிவிவகார அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது பாராளுமன்ற சபாநாயகர் கலரியிலிருந்து கொழும்பிலுள்ள இஸ்ரேல் அதிகாரிகள் குறிப்பு எடுத்தமைக்கு அவர்கள் வருத்தம் தெரிவித்துக் கடிதம் எழுதியுள்ளனர்" இவ்வாறு சபாநாயகர் நேற்றுப் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அத்தனகல எம். பி. திரு. லஷ்மன் ஜயக்கொடி எழுப்பிய சிறப்புரிமை மீறல் பிரச்சினைக்குத் தீர்ப்பு வழங்கும் போதே சபாநாயகர் இதனைத் தெரிவித்தார்.

பத்திரிகையாளர்கள், ஹான்சார்ட் நிருபர்கள் தவிர்ந்த

(5ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

புதிய 3 ஸ்ரார் ஓடு 2500 பழைய இந்தியன் ஓடு 1000 விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: சுகலக்ஷ்மி ஸ்ரோர், மாட்டின் றோட், யாழ்ப்பாணம். C 6174

சுதுமலை எச்சாட்டி வயிரவர் கோவிலுக்கு பின்பக்கத்தில் வீடுகட் டதற்கு ஏற்ற நிலப்பரப்பு நாலரை கிணற்றுப்பங்குடன் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவும். மா. தியாகராசா, சட்டத்தரணி, ஆனைக்கோட்டை. C 6142

வண்ணார்பண்ணை சிவப்பிரகாசம் வீதியில் முருகமூர்த்தி விநாயகர் கோவிலடியில் 2½ பரப்பு காணி வீட்டுடன் அல்லது 1 பரப்பு வெறும்காணி மலிவுவிலையில் உடனடியாக விற்பனைக்குண்டு. விபரம்: இ. யோசேஸ்வரன் லதா நகை மாளிகை 423, (247) K.K.S வீதி, சிவன்கோவிலடி, யாழ்ப்பாணம். C 6167

சுத்தமாக தயாரிக்கப்பட்ட குரக்கன் மா மொத்தமாகவும். சில்லறையாகவும் விற்பனைக்குண்டு M G M 777 K K S. Road and 208 1 st Cross St. Jaffna T. P. 22611. (C 5071)

புதிய நாலுதட்டு அடுப்புடன் (Oven) வீடியோ டெக், கஸட் மின்சார உபகரணங்கள் தையல் மெஷின் சாதாரண வீட்டு பாவனைக்குகந்த பொருட்கள், கண்ணாடி மற்றும் விளையாட்டுப் பொருட்கள் ஆங்கில தமிழ் புத்தகங்கள் விற்பனைக்குண்டு பார்வையிடும் நேரம் மு ப 9 00 பி. ப. 5-00 மணிவரை. தொடர்பு: எம் சுந்தரமூர்த்தி, 110, சாம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு. C-6160

மெய்கண்டான் கலண்டர், டயறிகள் பெருந்தொகையாக விற்பனைக்குண்டு, வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும் விலை No 1 - 29 50 No 2 - 27 50 பக்மிலன் புத்தகசாலை 3 பஸ் நிலையம் யாழ்ப்பாணம். (C 6165)

வீட்டுப் பாவனைப் பொருட்கள், தளபாடங்கள், Foam றபர்மெத்தைகள் சிங்கர், Oven Usha தையல்மெஷின்கள், T.V. ஹோல் செற் Steel Almirah, Office Table, Electic Cooker, கிளாஸ் வகைகள். Vedeo Deck Cevgma Water Pump. Dress-ing Table பெல்ஜியம் கண்ணாடியுடன், Formica சாப்பாட்டு மேசை, வயலின், Show case, மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு. M. தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். [C6136]

திருவெம்பாவை- திருப்பள்ளிஎழுச்சி பாடல்கள் கலாநிதி திருமுருக கிருபானந்தவாரியார் பேராசிரியர் இரா. இராதா கிருஷ்ணன், பேராசிரியர் சோ. சிங்காரவேலன் ஆகியோர்ன் விளக்கவுரையுடன் நல்லை ஆதீன முதலாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளைத் தொடர்ந்து தமிழகத்து ஓதுவார்மூர்த்திகள் பாடிய ஒலிப்பதிவு நாடாக்கள் வெளிவந்துவிட்டன. அகில இலங்கைத் திருமுறை மன்றம், 31/12, சங்கிலியன் வீதி, நல்லூர்- இராஜலிங்கம் வியாபார ஸ்தாபனம், நல்லைக்கந்தன் ஆலய அருகில், அபிராமி டொய்ஸ் நல்லை ஆதீன அருகாமையிலும் பெற்றுக் கொள்ளலாம். [C 6177]

## விற்பனைக்கு

சுன்னாகம் மதவடி லேனில் 3 பரப்பு காணி உடனடியாக விற்பனைக்குண்டு. க. கதிரவேல், வேர்ஸ் லோன்றி வளாக சந்தி, திருநெல்வேலி (C 6179)

## தேவை

பழைய கொப்பிகள் சோதனைப் பேப்பர்கள் தேவை தொடர்பு கொள்ளவும் அண்ணா இண்டஸ்றீஸ், இணுவில். (A3177)

அனுபவமும் திறமையுமுடையலேத்மன்தேவை உடன் நேரில் வரவும். திறமைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும் விபரங்களுக்கு: தொடர்பு: ஹரன் இண்டஸ்ரீஸ் ராச வீதி, அச்சுவேலி. C 6019

ஆங்கில அறிவுடைய லிகிதர் தேவை. எங்களுடைய ஸ்தாபனத்திற்கு இரண்டு மைல் தொலைவிற்குள் வசிப்பவராக இருக்கவேண்டும். குறைந்தது கல்விப் பொதுத் தராதரம் (உயர்கல்வி) கொமேர்ஸ் படித்தவர் விரும்பத்தக்கது. விண்ணப்பிக்கவும்: யாழ் ஏசனீஸ் றெஸ்ரறோன்ற் 124, R R நல்லையா வீதி, யாழ்ப்பாணம். C 6175

புதிதாக அமைக்கவிருக்கும் ஸ்தாபனத்துக்கு (1) ஆங்கில பெண் சுருக்கெழுத்தாளர், (2) தையல் வேலையில் அனுபவமும் உள்ள பெண்கள் தேவை இருசான்றிதழ்களுடன் (வயது வரையறுக்கப்படவில்லை) கீழ்காணும் விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும். இ நவரத்தினம் (இளைப்பாறியவங்கி உபமுகாமையாளர்) 27/4, வைமன்றோட், யாழ்ப்பாணம். C-6161

## வகுப்புக்கள்

English Assistant Teachers பரீட்சை 20. மீட்டல் வகுப்புகள் கடந்த கால வினாத்தாளுடனும் மேலும் பயிற்சிப் புத்தகங்களுடனும் ஆரம்பம்: 8-12-86 காலை 10 - 11/30 வரை S B Jyar 12, வைமன் வீதி, நல்லூர். C 6114

Home Science, (மனையியல் டிப்பிளோமா) Montessori Teachers Training (Diploma Courses,(பாலர்பயிற்சி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. புதிய வகுப்புகள் ஜனவரி முதல் வாரத்தில் ஆரம்பமாக உள்ளன 20-12-86 க்கு முன் நேரில்விண்ணப்பிக்கவும். அதிபர், உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். C 6172

G.S.Q B Sc (Bio), G.A.Q. B A நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. G S Q (Bio), B Sc New Batch 87/88 G S Q Maths Pure Applied. Stats) ஜனவரி முதல் வாரத்தில் ஆரம்பமாக உள்ளன 20-12-86 க்கு முன் நேரில் விண்ணப்பிக்கவும். அதிபர், உயர்கலைக்கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். C 6173

## நன்றித்துதி

புனித யூதாததேயுவின் வேண்டுதலால் உயர்தரப் பரீட்டையில் மிகச் சிறந்த பெறுபேற்றைப் பெற்றதற்கு நன்றி கூறுகிறேன்.

ஓர் அடியான்.

C 6143

## வாடகைக்கு

18' நீளம் 13' அகலம் கொண்ட பிளாட் பண்ணப்பட்டுள்ள இரண்டு கடைகள் சிவன்பண்ணை வீதியில் வாடகைக்கு உண்டு. தொடர்பு: S சிறீகாந்தன் 175, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம். C 6163

## தவறிவிட்டது

எனது மூக்குக் கண்ணாடி (கறுப்பு) மருதனாமடச் சந்தி வைரவர் கோவிலுக்கு முன்னால் 2-12-86 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். எஸ். டஞ்சலிங்கம், ''திருப்பதி'' மானிப்பாய் றோட், சுன்னாகம். (C 6176)

## மணப்பந்தல்

இந்து வேளாளர் குடும்பத்தைச்சேர்ந்த G A Q வரை கல்வி கற்றுவிட்டு விசுவமடுவில் சொந்தத்தில் விவசாயம் செய்யும் மதுப் பழக்கமற்ற 32 வயதுள்ள மணமகனுக்கு பெற்றோர் மணமகளைத் தேடுகின்றனர். கல்வித்தகைமையும், குடும்பப்பொறுப்பும், பண்பும் உள்ள செவ்வாய்க் குற்றம் உள்ளவர்கள் மட்டும் குறிப்பு மற்றும் விபரங்களுடன் விண்ணபபிக்கவும் விளம்பர இலக்கம்: 6153, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். C 6153

## சேவை

எப் பொருள்களானாலும் புதியனவைகளானாலும், பழையனவைகளானாலும் வாங்கவும்/விற்கவும் தினமும் எம்மை நாடுங்கள். எங்களிடம் புதியனவும் பழையனவுமாகிய நானாவித பொருட்கள் மலிவு விற்பனைக்கிருக்கின்றன. லக்கி பெனிபிட் கொம்பனி லிமிட்டட் பொதுச் சந்தை (சந்திக் கருகாமையில்) கோப்பாய். [C 6088]

## கல்வி

(தரம் 9) 10ம் ஆண்டில் கல்விகற்க விரும்பும் மாணவர்களின் அதிகூடிய புள்ளிகளை எடுக்கக்கூடிய முதல் 3 மாணவர்களுக்கு 1987ம் ஆண்டு இலவசக்கல்வியை போதிக்க முன்வந்துள்ளோம். பரீட்சை விண்ணப்ப முடிவுத் திகதி 5-12-86. (7/12 9-30—11-30 விஞ்ஞானம், (8/12) 9 30—11 30 கணிதம், (9/12) 9-30—11-30 தமிழ் மேற்குறிப்பிட்ட திகதிகளில் போட்டிப்பரீட்சை நடைபெறும். Science Centre Karaveddy. [C-5925]

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## கூறுவிலை கோரல்

யாழ். மாநகரசபை மின் தூண்கள் தயாரிக்கும் இடமான பாஷையூரிலிருந்து யாழ் மாநகராட்சி மன்ற எல்லைக் குட்பட்ட வேலைத்தளங்களுக்கு 25', 28', 30 அடி நீள முற்ற மின்சார தூண்களை சேதம் எதுவுமின்றி வண்டியில் ஏற்றிப் பறிப்பதற்கு 1987ம் ஆண்டிற்கான கூறு விலைகள் எதிர்வரும் 12-12-1986ம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும் கூறுவிலைகள் கம்பம் ஒன்று ஏற்றிப் பறிப்பதற்கு எவ்வளவு என்பதை தெளிவாகக் குறிப்பிட வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் ''மின் தூண் ஏற்றிப்பறிப்பதற்கான கூறுவிலை'' என எழுதப்பட்டிருக்க வேண்டும்.

சி. வீ. கே. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம். A 3185

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

செல்வன் கார்த்திபன்

ஏழாலை மேற்கு திரு. ஊர் கணேசபிள்ளை சந்திரகாந்தி தம்பதிகளின் செல்வப் புதல்வன் கார்த்தீன் 27 - 11 - 86 இல் தனது முதலாவது பிறந்த நாளை கனகமாளிகை இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். A 3.87

## மின் தடை

இலங்கை மின்சார சபையின்

## முக்கிய அறிவித்தல்

1986-12-07ம் திகதி ஞாயிற்றுக்கிழமை முக்கிய திருத்த வேலைகள் செய்ய இருப்பதனால் காலை 8-00 மணி முதல் மாலை 5-00 மணி வரை யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் அமைந்திருக்கும் பெரும்பாலான உப மின் நிலையங்களுக்கும், கோண்டாவில் கொக்குவில், கோப்பாய், திருநெல்வேலி, மானிப்பாய், ஆனைக்கோட்டை, நவாலி ஆகிய பகுதிகளுக்கும் மின் விநியோகத் தடை ஏற்படுமென சகல மின்பாவனையாளர்களுக்கும் அறியத்தருகின்றேன்.

இம்மின் தடையால் ஏற்படும் சகல மின் நுகர்வோரிடமிருந்தும் அவர்களுக்கு ஏற்படும் வசதியீனங்களுக்காக இலங்கை மின்சாரசபை தனது மனவருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கின்றது.

இப்படிக்கு.
மின் பொறியியலாளர்,
யாழ் பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சார சபை.
சுன்னாகம்.

(A 3186)

## தொல்காப்பிய தொடர் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், வியா

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் சிறப்பாய்வாளராகப் பணிபுரியும் திரு. க. வீ அவர்களைக்கொண்டு தொல்காப்பியத் தொடர் சொற்பொழிவுகளை நிகழ்த்துவதற்கு கருகம்பனை அருள்மிகு நாகராஜேஸ்வரி தேவஸ்தான கல்விப் பிரிவு ஏற்பாடுகளைச் செய்துவருகிறது.

## விலைகுறைப்பு

உடன் உரித்த புறெயிலர்

கோழி இறைச்சி

**1 Kg - 52/-**

விற்பனையாகின்றது.

வரணி மிசன் விற்பனை நிலையம்

145, நவீனசந்தை
யாழ்ப்பாணம்.

A-3222

## UNIVERSITY OF JAFFNA

PAPER CUTTING MACHINE

Quotations are invited for the supply of a Paper Cutting Machine with the following specifications.

36" — BLADE
Electric and Hand operated (Semi-automatic)
Chinese make preferable.

Please forward your quotations to reach the Bursar, University of Jaffna, Thirunelvely, Jaffna, on or before the 23rd December. 1986 indicating in the left hand corner of the envelope the mark "quotation for PAPER CUTTING MACHINE"

Registrar.
University of Jaffna.
Thirunelvely, Jaffna

(A 3189)

உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் அக்ஷய ஆண்டு கார்த்திகைத் திங்கள் 20ம் நாள் [6-12-86] சனிக்கிழமை பகல் 11-55 முதல் 12-05 மணிவரை வரும் சுபமுகூர்த்தத்தில்

| | |
|---|---|
| எமது சிரேஷ்ட புத்திரன் செல்வன் **தயாபரன்** (உரிமையாளர்: தயா அச்சகம், யாழ்ப்பாணம்) | எமது புத்திரி செல்வி **சாந்தாதேவி** (சாந்தி) |

ஆகியோருக்கு மணமகள் இல்லத்தில் அம்பாள் கிருபையால் நடைபெற இருக்கும் திருமண வைபவத்திற்குத் தங்களையும் சுற்றஞ்சூழ வருகைதந்து மணமக்களை வாழ்த்தியருளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

★ (வரவேற்புபசாரம்: மணமகன் இல்லத்தில் 7 12-86 ஞாயிற்றுக்கிழமை பி. ப. 4-00 மணியளவில் நடைபெறும்.)

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

| | |
|---|---|
| க. விஜயசிங்கம் தம்பதிகள் (உரிமையாளர்: கலா சோடாக் கம்பனி, யாழ்.) 166/3, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் | தி. நாகரத்தினம் தம்பதிகள் (உரிமையாளர்: சாந்தி அச்சகம், யாழ்ப்பாணம்) 575, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். |

(இரு வீட்டார் அழைப்பு)

A 3183

## கொமெய்னியின் வாழ்த்துடன் ஒரு லட்சம் ஈரான் துருப்புக்கள்

# ஈராக் மீது படை எடுப்பு!

தெஹ்ரான் நவ 4.

**ஈரானிய அரசாங்கம் ஒரு லட்சம் புதிய துருப்புக்களை வளைகுடா யுத்த முனைக்கு அனுப்பிவைத்துள்ளது. இத்துருப்புக்கள் ஈரானியத் தலைவர் ஆயத்தொல்லா கொமெய்னியின் வாழ்த்துக்களுடன் நேற்று ஈராக்குடனான யுத்தத்துக்குப் புறப்பட்டுச் சென்றன.**

தெஹ்ரானிலுள்ள மாபெரும் விளையாட்டரங்கொன்றில் இப்புதிய ஈரானிய துருப்புக்கள் கூடியிருந்தன. அரசின் தலைவர் ஆயத்தொல்லா கொமெய்னி சபாநாயகர் ரப்சஞ்சானி ஆகியோர் இத்துருப்பினர் மத்தியில் உரை நிகழ்த்தினர்.

ஆயத்தொல்லா கொமெய்னி தமது உரையில் கூறியதாவது:- "புதிய துருப்புக்களின் படையெடுப்பு ஈராக் ராணுவத்தை நிச்சயம் பின்வாங்கச் செய்யும்'' என்றார்.

இவர் மேலும் அங்கு பேசுகையில், வளைகுடாப்போரில் ஈராக்கிற்கு உதவிவழங்கும் வளைகுடா நாடுகளை கடுமையாக எச்சரித்தார்.

ஈரான் - ஈராக் வளைகுடாப் போர் கடந்த ஆறுவருட காலமாக நீடித்துவருகிறது. இப்போரில் இருதரப்பிலும் லட்சக்கணக்கானோர் பலியாகியுள்ளனர். மேலும் ஆயிரக்கணக்கானோர் பலத்த காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

பொருளாதார ரீதியிலும் இரு சாராருக்கும் பலத்த இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன

## தமிழ்நாடு சட்டசபையிலிருந்து அ. தி. மு. க.வினர் நீக்கம்!

சென்னை நவ 4

தமிழ்நாடு மாநில சட்டசபையிலிருந்து இரு அ. தி. மு. க. உறுப்பினர்கள் நீக்கப்பட்டுள்ளனர்.

கே. வி. கந்தசாமி, ஆர். தாமரைக்கண்ணி ஆகியோரே இந்த உறுப்பினர்களாவர்.

சட்டசபை ஒழுங்கு விதிகளை மீறியிருந்தார்கள் என்ற காரணத்தினாலேயே இவர்கள் இருவரும் சபை உறுப்பினர் பதவியிலிருந்து விலக்கப்பட்டனர்.

இவர்களின் உறுப்பினர் பதவி நீக்கத்தை தமிழக முதலமைச்சரும், அ. தி. மு. க. பொதுச்செயலாளருமான திரு எம். ஜி. இராமச்சந்திரன் நேற்று உத்தியோக பூர்வமாக அறிவித்தார்.

சட்டசபையிலிருந்து இவர்கள் இருவரும் நீக்கப்பட்டதையடுத்து அ. தி. மு. க. வின் உறுப்பினர் தொகை 130 ஆகக் குறைவடைந்துள்ளது. தமிழக சட்டசபையின் மொத்த உறுப்பினர் தொகை 235 ஆகும்.

உலகச் செய்திகள்

## மே. ஜேர்மனியில் இரு அராபியர்களுக்கு சிறை!

பேர்லின். நவ, 4

மே. ஜெர்மனியில் ஜோர்தானைச் சேர்ந்த இரு அராபியர்களுக்கு முறையே 45 வருட 14 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 29ம் திகதி மே. பேர்லினில் ஜெர்மன் அரபு நட்புறவுச் சங்கத்தில் குண்டொன்றை வெடிக்கச் செய்தது தொடர்பாகவே மேற்படி இருவருக்கும் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இக் குண்டு வெடிப்பில் 9 பேர் காயமடைந்திருந்தனர் ஜோர்தானைச் சேர்ந்த அஹமட் ஹசி பருக்கலா மே ஆகியோருக்கே முறை 45 வருட 14 வருட சிறைத் தண்டனைகள் விதிக்கப்பட்டுள்ளன

45 வருட தண்டனை பெற்ற வரான அஹமட் ஹசி என்பவர் பிரிட்டனில் தண்டிக்கப்பட்ட நேசர்ஹின்டாவியின் சகோதரராவார்

கடந்த ஏப்ரல் மாதம் பிரிட்டனின் ஹித்ரோ விமான நிலையத்தில எல்-அல் என்ற இஸ்ரேலிய விமான சேவை விமானமொன்றிற்கு நேசர் ஹின்டாவி குண்டு வைக்க முயற்சி செய்தவேளை முறியடிக்கப்பட்டார்.

கருவுற்றிருந்த தமது ஐரிஷ் காதலி மூலமாகவே இவர் இக் குண்டு வைப்பு முயற்சியில் ஈடுபட்டார்.

தொடர்ந்து இவர் மீதான விசாரணை முடிவில் கடந்த அக்டோபர் மாதம் லண்டன் நீதிமன்றம் இவருக்கு 45 வருட சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கியது

### இரகசிய ஆயுத விநியோகம்———

## "றீகன் நிர்வாகத்துக்கு அவமானமாகும்"

### — உப அதிபர் புஷ்

வாஷிங்டன், நவ 4

"அமெரிக்காவில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள ஈரானுக்கான இரகசிய ஆயுத விநியோக விவகாரம், றீகன் நிர்வாகத்துக்கு அவமதிப்பை ஏற்படுத்தியுள்ளது'' என்று அமெரிக்க உப ஜனாதிபதி திரு. ஜோர்ஜ் புஷ் தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பாக திரு. புஷ் நேற்று முதல் தடவையாக நாட்டுமக்கள் மத்தியில் கருத்து வெளியிட்டார். அப்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. புஷ் மேலும் பேசுகையில் ஈரானுக்கான இரகசிய ஆயுதவிநியோகத்தைதாம் அறிந்திருந்ததாகவும், ஆனால் அவ்விநியோகம் மூலம் கிடைத்த வருமானத்தை 'நிக்கரகுவா கொன்ற்ரா' கிளர்ச்சியாளர்களுக்கு வழங்கியது பற்றி தமக்கு எதுவும் தெரியாதெனக்கூறினர்.

இந்த விவகாரம றீகன் நிர்வாகத்துக்கு பெரும் நெருக்கடியையும் அவமானத்தையும் ஏற்படுத்தியிருப்பதாகவும் கூறிய திரு. புஷ் இது குறித்து உண்மையான விபரங்களை அறிந்து கொள்ளும் உரிமை அமெரிக்கர்களின் அடிப்படை உரிமைகளைச்சார்ந்ததாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

### இ. தொ. கா. தலைவருக்கு தடை:

## 1300 தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்

(நுவரெலியா நிருபர்)

மஸ்கெலியாப்பகுதியிலுள்ள 'மரே' தோட்டத்தைச் சேர்ந்த 1300 தொழிலாளர்கள் இரு கோரிக்கைகளை முன்வைத்து வேலைநிறுத்தஞ்செய்து வருகின்றனர்.

தோட்டக் கங்காணி ஒருவரை, அத்தோட்டத்துப்பெரிய துரையானவர் வேலைசெய்வது தமக்குத் திருப்தியாக இல்லை என்று கூறி வேலை நீக்கம் செய்துவிட்டதையும், இது சம்பந்தமாக துரையிடம் நியாயம் கேட்கச்சென்ற இ. தொ. காங்கிரஸின் மரே தோட்டத் தலைவரை 7 நாட்களுக்கு வேலைக்கு வரக்கூடாதென்று உத்தரவிடப்பட்டதையும் கண்டித்து தோட்டத்தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் குதித்துள்ளனர்

கடந்த 27ம் திகதி தொடக்கம் இந்த வேலை நிறுத்தம் நடைபெற்றுவருகிறது.

இது விடயம் இவ்வாறிருக்க நேற்று குறிப்பிட்டதோட்டத் தொழிலாளர்களுக்கு முற்பணம் வழங்கும் தினமாகையால், பெரியதுரையான திரு. வி. ஸி. டிமெல்லிடம் சென்று முற்பணம் வழங்குமாறு கேட்டுக்கொண்டார்கள்

### துரை தாக்கப்பட்டார்

வேலைநிறுத்தத்தைக்கைவிட்டால்தான் முற்பணம் வழங்கப்படும் என்று பெரிய துரை தெரிவித்ததுடன், தொழிலாளர்களை வாய்க்குவந்தபடி அவதூறாகப் பேசினாராம். இதனைத் தொடர்ந்து பேச்சுவார்த்தையிலீடுபட்டிருந்த தொழிலாளர் பிரதிநிதிகள் துரையை கடுமையாகத் தாக்கத் தொடங்கியதாகவும், அவர் அவ்விடத்தைவிட்டு ஓடித் தலைமறைவாகிவிட்டதாகவும் தெரிய வருகிறது

இச்சம்பவங்கள் பற்றி தோட்ட நிர்வாகி திரு பெர்னாண்டோ மேலதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நிலைமையை விளக்கியதன்பேரில் உடனடியாகத் தொழிலாளர்களுக்கு முற்பணம் வழங்கப்பட்டது

இது விஷயம் எப்படி இருந்தபோதிலும், வேலை நீக்கம் செய்யப்பட்ட கங்காணிக்கு மீண்டும் வேலை வழங்க வேண்டும்; மரே தோட்டத்துரை இடமாற்றம் செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளும் நிறைவேறும்வரை தாம் வேலைநிறுத்தம் செய்யப்போவதாக 1300 தொழிலாளர்களும் தெரிவித்துள்ளார்கள். (மா)

## பாடசாலை நேரசூசி

உடுவில், வியா.

1987ம் ஆண்டுக்கான பாடசாலை நேர சூசிகளை கல்வித் திணைக்களத்தின் அங்கீகாரத்துக்காக டிசம்பர் மாதம் 31ம் திகதிக்கு முன்னர் அனுப்புவைக்குமாறு யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் யாழ். மாவட்டப் பாடசாலை அதிபர்களைச் சுற்றறிக்கை மூலம் கேட்டுள்ளார்

## "மாணவர் சமூகசேவையிலும் ஈடுபடவேண்டும்" லியோ வைபவத்தில் வேண்டுகோள்

பண்டத்தரிப்பு, வியா

"மாணவர்கள் கல்வியோடு மட்டும் நின்றுவிடாது சமூக சேவையிலும் ஈடுபடவேண்டும். மாணவர்களின் பொது நலசேவைக்கு லியோ கழகங்கள் சிறந்த சாதனமாக விளங்குகின்றன''

இவ்வாறு சுழிபுரம் விக்ரோறிய கல்லூரி லியோ கழகத்தின் புதிய நிர்வாகசபையின் பதவியேற்பு வைபவத்திலும், "லியோ விக்ரோறியா'' விசேடமலர் வெளியீட்டு வைபவத்திலும் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையில் வட்டுக்கோட்டை லயன்ஸ்கழகத் தலைவர் டாக்டர் எமில் அத்தநாசியார் குறிப்பிட்டார்.

லியோகழக தலைவர் திரு ஏ. தனபாலன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபர் திரு க. அருணாசலம் உரையாற்றுகையில் வடபகுதியிலுள்ள லியோகழகங்களுள் இக்கல்லூரி கழகம் குறிப்பிடத்தக்க சேவைகளை ஆற்றியுள்ளது என்றும் குறிப்பாக தொழுநோய் பரவியுள்ள சுழிபுரம் காட்டுப்புலம் கிராமத்தில் இக்கழகத்தினர் பல்வேறு நற்பணிகளை மேற்கொண்டு வந்துள்ளனர் என்றும் குறிப்பிட்டார்.

யாழ் மாவட்ட தொழிற்பயிற்சி யக்குநர் லயன் இ. விஜரத்தினம் உரையாற்றுகையில் எமது எதிர்கால சந்ததியினராகிய மாணவ சமுதாயம் சிறந்த தலைமைத்துவ பண்புகளை பெறுவதற்கும் மக்கள் சேவையில ஈடுபடுவதற்கும் இதுபோன்ற லியோகழகங்கள் பேருதவி செய்கின்றன என்றும் கடந்தகாலங்களில் இக்கழகம் மேற்கொண்ட சேவைகளை பாராட்டுவதாகவும் கூறினார்.

முன்னாள் வட்டுலயன்ஸ் கழகத்தலைவர் லயன் உ. நடேசகடாட்சம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி லியோகழகத் தலைவர் டாக்டர் றுபேர்ட்போட்டர் லயன் எஸ். ரி. வைத்திலிங்கம் ஆகியோர் உட்படமற்றும் பலர் உரையாற்றினார்கள். லியோ விக்ரோறியா என்ற விசேடமலர் வெளியீடும் நடைபெற்றது இறுதியில் கழக செயலாளர் செல்வன் விமுத்தழகன் நன்றியுரை நிகழ்த்தினார். [ஊ]

## "கலை, கலாசாரத்துக்கமைய கதைகள் அமையவேண்டும்"

### 'கவிஞர்' முதலாமாண்டு விழாவில் கருத்து

வல்வெட்டித்துறை, வியா

வல்வை நெடியகாடு இளைஞர்களின் கைவண்ணத்தில் உருவாகிய கவிஞன் கையெழுத்துச் சஞ்சிகையின் முதலாவது ஆண்டு பூர்த்தி விழா கடந்த செவ்வாய்க்கிழமை கணபதி பாலர் பாடசாலை மண்டபத்தில் திரு. வே. பரமகுரு தலைமையில் நடைபெற்றது

சிறப்புவிருந்தினராகவல்வை நகர சபையின் முன்னாள் உறுப்பினர் திரு பொ. வேலும்மயிலும் கலந்து கொண்ட ஓராண்டு பூர்த்தி விழாவில் சிறப்பு சொற்பொழிவாற்றிய நாடகக் கலைஞன் திரு என். தேவதாஸ் சுவையில் கலை, கலாசாரம், பண்பாடு இவற்றுக்கமையவே உருவாக்கப்படவேண்டிய கதைகள் அமையவேண்டும், அதிலும் உருவாக்கப்படும் கதாபாத்திரங்களின் உணர்ச்சிகளுக்கே முதலிடம் அளிக்கப்பட வேண்டும்.

கதைகளையும் கருத்துக்களையும் இக்காலகட்ட சூழல்களுக்கமைய சீர்திருத்தங்களை மென்மையான வகையில் வாசகர்கள் இலகுவில்புரிந்துகொள்ளக்கூடியவகையில் எழுத வேண்டும் எனவும் கூறினார்

வல்வை நகரசபை முன்னாள் தலைவர் து நவரத்தினம் பழம்பெரும் நாடகக் கலைஞரும் சிலம்பவித்பன்னருமான திரு என் சோதிசிவம் ஆகியோரும் மற்றும்பலரும் உரையாற்றினர். கவிஞன் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர்செல்வன் பா. உதயகுமார் தனது உரையில் இளைய சமுதாயத்தினர் சகலரும் எமது சஞ்சிகையில் கதை, கட்டுரை கவிதை இன்னும்பல ஆக்கங்களை ஆக்கித் தருவதன்மூலம் சஞ்சிகையை மேன்மைப்படுத்துவதுடன் தமது அறிவையும் ஆற்றலையும் மேம்படுத்திக்கொள்ளலாம் என்றும் கூறினார்.

[6ம் பக்கம் பார்க்க]

### மணிவாக்கு

நாம் வாழும் இவ்வுலகில் பலதூர இடங்களில் மக்கள் செல்லொணா அல்லற்படுகிறார்கள். அதையிட்டு நமக்கு வேதனை ஏற்பட்டால் தான் நாம் பண்புடைய மக்கள்.

ஓர் அறிஞர்

## நமது நோக்கு

# எல்லோருக்கும் சொந்தம்

"சிறிலங்கா எந்த ஒரு சமயத்துக்கோ, இனத்துக்கோ, ஜாதிக்கோ உரியதல்ல. அது சகல பிரஜைகளுக்கும் உரிய நாடு"

சில தினங்களுக்கு முன் ஜோன் டி சில்வா ஞாபகார்த்த மண்டபத்தில் உரையாற்றுகையில் ஜனாதிபதி றிச்சர்ட் ஜூனியஸ் ஜயவர்த்தன அவர்கள் இந்த "மகா வாக்கியங்களை" வெளியிட்டுள்ளார். அத்தோடு விடவில்லை அவர், "ஒவ்வொரு பிரஜையும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளையும் கற்கவேண்டும்" என்றும் அறிவுரை கூறியுள்ளார்.

இந்த நாடு சகல மக்களுக்கும் உரியது எனில் சிங்களவர்கள் மட்டுமே ஏன் ஆட்சி அமைக்கிறார்கள். எல்லாமதத்தவருக்கும் உரியது எனில் பௌத்த மதம் மாத்திரமே அரசாங்க மதமாக ஏன் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது? பௌத்தர் அல்லாத எவராவது அல்லது சிங்களவர் அல்லாதஎவராவது பிரதம மந்திரியாக வேணும் வரும் வாய்ப்பு இருக்கின்றதா?

இந்தநிலையில் அரசாங்கத் தலைவர்கள் இந்த நாடு எல்லா இனத்துக்கும் மதத்துக்கும் உரியது என்று கொள்வதில் என்ன அர்த்தம் இருக்கின்றது.

சிங்களம் மட்டுமே அரசகருமமொழியாக இருக்கும் போது, ஏனையமொழிகளைப் படிப்பதால் சிங்களமக்களுக்கு எதுவிதப்பயனும் இல்லை. அதேசமயம் பதவிகளைப் பெறலாம் என்ற நப்பாசையில் சிங்களம் கற்கும் தமிழர்கள் பெரும்பாலும் உரிய பதவிகளைப் பெறுவதுமில்லை. இந்நிலையில் சிங்களவரைத் தமிழையும் தமிழரை சிங்களமும் படியுங்கள் என்று அடிக்கடி கூறப்படுவதின் அர்த்தம் என்ன?

சிங்களவர்கள், அதுவும் பௌத்தர்களே இந்த நாட்டில் பெரும்பான்மையர், ஆனால் அவர்களின் நல உரிமைகளுக்கே முதலிடம். அடுத்த நிலையில் தான் ஏனைய மக்களும் மதங்களும், மொழிகளும் என்ற நிலை அரசியல் சாசனத்திலேயே உறுதிப்படுத்தப்பட்டு விட்ட நிலையில் மேற்கூறியவாறு பொன்மொழிகளை உதிர்ப்பதனால் பத்திரிகைகளில் பெரிய எழுத்துக்களில் போடுவிக்கலாம். வானொலி, தொலைக்காட்சிகளில் முக்கியத்துவம் கொடுக்க வைக்கலாம். அதனால் வெளிநாடுகளிலும் நம் தலைவர்களின் தாராள மனப்பான்மை பற்றி பெரிதாகப் பேசப்படலாம்.

ஆனால் உண்மையில் நடைமுறை நிலை என்ன?

சகலமக்களும் இந்த நாட்டுத்தலைவர்களினால் ஓரவஞ்சனையின்றி ஒரே விதமாகப் பார்க்கப்பட்டிருந்தால்; இன்று நாடு செந்தளிக்கும் நிலை ஏற்பட்டிருக்க முடியுமா?

## யாழ். தொலைதொடர்பு திணைக்களம்

யாழ்ப்பாணம் தொலைதொடர்பு திணைக்களத்தை ராணுவ பாதுகாப்பில் கொண்டுவருவதுபற்றி ஆலோசிக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது.

இதனால் ஏற்படும் விளைவுகள் பற்றி பலரும் சிந்திக்கத் தலைப்பட்டிருக்கிறார்கள்.

இத்திணைக்களத்தில்பெறுமதிமிக்க சாதனங்கள் உள்ளன. இவைகளை இயக்கி பணிபுரியும் ஊழியர்கள் வெளியில் இருந்துவருகிறார்கள். இப்பகுதி இராணுவ முகாமுக்கருகில் இருப்பதாலும், அடிக்கடி ராணுவத்துக்கும் போராளிகளுக்குமிடையில் இங்கு மோதல்கள் ஏற்படுவதாலும் ஊழியர்கள், கலக்கமடைகிறார்கள், பாதிப்புக்குள்ளாகிறார்கள்; சில தினங்களுக்குமுன் ராணுவத்தாக்குதல் காரணமாக சில ஊழியர்கள் காயமடைந்துள்ளனர். இதனால் இத்திணைக்கள வேலைகள் பாதிப்புக்குள்ளாகியுள்ளன

இன்றைய சூழ்நிலையில் இத்திணைக்களத்திலுள்ள சாதனங்களுக்கு பாதுகாப்பு இருத்தல் வேண்டும் என அரசாங்கம் கருதுவதில் நியாயமுண்டு. அதே சமயம் இத்திணைக்களம் இயங்குவது இப்பிரதேச மக்களுக்கு பல்வேறு வகையிலும் பயனளிப்பதாய் உள்ளது என்பதைப் போராளிகளும் உணராமல் இல்லை.

எனவே இத் திணைக்கள சாதனங்களுக்கு சேதம் ஏற்படுவதை எவரும் விரும்பமாட்டார்கள் என்பது திண்ணம்.

எனவே இத் திணைக்களத்தை ராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரும் யோசனை இருந்தால் அரசு அதனை உடனகைவிடுவதே நல்லது.

இக் கட்டிடம் இருக்கும் பகுதியில் மோதல்களைத் தவிர்ப்பதற்கு முடியுமானால் ஊழியர்கள் பயமின்றி கடமைக்கு போய் வரவும் திணைக்கள பணிகள் தடங்கலின்றி நடைபெறவும் உதவும்.

காங்கேசன்துறை

# மார்பு நோய் சிகிச்சை நிலையத்தை சீரமைக்க மக்கள் உதவவேண்டும்

## அங்குரார்ப்பணக் கூட்டத்தில் வேண்டுகோள்

சுன்னாகம், வியாழன்

"காங்கேசன்துறையில் அமைந்துள்ள மார்புநோய் சிகிச்சை நிலையம் ஒன்றுதான் வடமாகாணத்தில் உள்ள ஒரே ஒரு நிலையமாகும். இச் சிகிச்சை நிலையத்தைநல்லநிலைக்குக்கொண்டு வர மக்கள் பூரணஒத்துழைப்புத் தரவேண்டும்"

காங்கேசன்துறையிலுள்ள மார்புநோய் வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் உரையாற்றிய வைத்தியக் கலாநிதி ஆ. இராசநாயகம் மேற் கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

வைத்திய அதிகாரி செல்வி க. சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் வைத்தியக் கலாநிதி ஆ. இராசநாயகம் மேலும் கூறியதாவது!

மக்களுடைய ஆதரவுடன் தான் எதையும் செய்ய முடியும். இந்த வைத்தியசாலையில் நிலவும் குறைபாட்டினை நீக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளுக்கு மக்கள் பூரண ஒத்துழைப்புத் தரவேண்டும்.

இவ்வைத்தியசாலையின்கட்டிடங்கள் மிகவும் பழமைவாய்ந்தவையாகும் எனவே கட்டிடங்கள் யாவும் புனர்நிர்மாணம் செய்யப்பட வேண்டியுள்ளது இன்று அங்குரார்ப்பணம்செய்து வைக்கப்படவிருக்கும் வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் சகல நடவடிக்கைகளுக்கும் மக்களின் ஒத்துழைப்பு அவசியம்.

அபிவிருத்திச்சபை புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் வைத்தியக்கலாநிதி செல்வி க சோமசுந்தரம், உபதலைவர்கள் வைத்தியக் கலாநிதி ஆ இராசநாயகம். திரு. இ வேலும்மயிலும், செயலாளர் திரு எம் செல்வராசா, உபசெயலாளர் திரு என். சிவராசா, பொருளாளர் திரு சி. கே. சிவலிங்கம் ஒன்பதுபேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்ரப்பட்டது.

# அமரர் வீரசிங்கம் கூட்டுறவால் வடக்கையும் கிழக்கையும் இணைத்த முன்னோடி

இன்று [05-12-86] கூட்டுறவுப் பெரியார் அமரர் வி வீரசிங்கத்தின் 22-வது சிராத்த தினம்.

'அரிது, அரிது மானிடராதல் அரிது' என்னும் தமிழ் மூதாட்டியின் வாக்கினுக்கு அமையஎழுபதிரண்டு ஆண்டுகள் பெருமைக்குரியவராக வாழ்ந்து புகழுடம்பெய்தியவரே நமது கூட்டுறவுப் பெரியார் விசுவலிங்கம் வீரசிங்கம்.

ஆசிரியத் தொழிலில் முப்பது ஆண்டுகள் சிறப்புற்ற பெரியார் வீரசிங்கம் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபராகி ஆற்றிய தன்னலமற்ற கல்விச்சேவையும் வடபகுதி கூட்டுறவு இயக்கத்திற்கு ஆற்றிய சேவையும் வரலாற்றுச் சிறப்புக்குரியவை: பெரியார் புகழுடம்பெய்தி 22 ஆண்டுகள் இன்று நிறைவுற்ற போதும் அவரின் கூட்டுறவு இயக்கப்பணி கல்விச் சேவைகள் மூலம் பெரியாரின் நினைவுகள் நினைவுகூரப்படுவது மானிடர் எல்லோருக்கும் கிடைக்கப் பெறாத அரிதிலும் அரிதான பெருமையாகும்;

### பெரியாரின் மகத்துவம்

கூட்டுறவு இயக்கம் வடபகுதியில் இன்றும் ஓரளவுக்கு நிலைத்து நிற்கிறது என்றால் அதற்கு அமரர் வீரசிங்கம் தான் காரணம். வடபகுதியில் புகழ்பூத்த கூட்டுறவு இயக்கம் அமரர் வீரசிங்கத்தினால் பெருமை பெற்றதா? அல்லது கூட்டுறவு இயக்கத்தால் அமரர் வீரசிங்கம் புகழ் பெற்றாரா? என்பதை சிந்திக்க வேண்டிய கால கட்டமிது: நிச்சயமாக அமரர் வீரசிங்கத்தால்தான் கூட்டுறவு இயக்கம் புகழ் பெற்றது என்று கூறலாம்.

கலைஞர் மு. கருணாநிதி கூறியதைப் போல் 'கூட்டுறவுச் சங்கங்களைத் திறம்பட நிர்வகிப்பதற்கு தூய்மையான உள்ளம் வேண்டும். மேகங்கள் மழைபொழிய ஒன்று கூடுகின்றன? காகங்கள் கிடைத்ததை உண்பதற்கு ஒன்றுகூடுகின்றன. கூட்டுறவாளர்களைப் பொறுத்தவகையில் காகங்களைப்போல் செயற்படாமல், சகலருக்குமே நன்மை பயக்கும் மேகங்களைப் போன்றவகையில் செயல்படவேண்டும்'', [மேகங்களைப்போல் வாழ்ந்து காட்டியவர்தான் அமரர் வீரசிங்கம்.

கூட்டுறவு இயக்கம் எந்தவிதமான அரசகட்டுப்பாடுகளுக்குள்ளும் ஆளாகாமல் சுயமாக சுயாதீனத்துடன் வளர்ந்து வரும் இயக்கமாக இருக்க வேண்டுமெ கொள்கையை உடைய அமரர் வீரசிங்கம் அவ்வியக்கத்துக்குள் சுரண்டல் பேர்வழிகள் தன்னலம் கருதும் புல்லுருவிகளை அணுக விடாது அவர்களைக் கூட்டுறவு இயக்கத்திலிருந்து துரத்தியடிக்க வேண்டுமென்ற தீவிரவாதக் கருத்தினைக் கொண்டிருந்தார்.

### கூட்டுறவின் தந்தை

வட பகுதியிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களை இணைக்கும் ஒரு பாரிய சபையாக விளங்கிய வடபகுதி ஐக்கிய நேற்பார்வைச் சபையின் தலைவராக 27 ஆண்டுகளும் 1955ம் ஆண்டு நிறுவப்பட்ட அகில இலங்கை கூட்டுறவுச் சமபேளனத்தின் முதல் தலைவராகவும் திரு. வீரசிங்கம் இருந்து சேவையாற்றியுள்ளார்,

இலங்கையின் இன்றைய மிகப் பாரிய பிரச்சனையாக இருந்துவரும் இனப் பிரச்னைக்கான அரசியல் தீர்வில் வடக்கையும் கிழக்கையும் இணைப்பதற்கு அரசு எத்தனையோ நொண்டிச் சாட்டுக்களை கூறி இணைப்பதைத் தட்டிக்கழித்து வருகிறது, ஆனால் அமரர் வீரசிங்கம் 1937ம் ஆண்டிலேயே கூட்டுறவு இயக்கத்தின் மூலம் வடக்கையும் கிழக்கையும் இணைத்து அதாவது வடக்கிலும் கிழக்கிலும் உள்ள கூட்டுறவுச் சங்கங்களை ஒன்றிணைத்து அதற்கு ஒரு சம்மேளனம் நிறுவி அதன் தலைவராக வடக்கிலும் கிழக்கிலும் சேர்த்து தெரிவு செய்யப்பட்ட முதல் தலைவராக வடக்கும் கிழக்கும் இணைப்புப்பாலமாகத் திகழ்ந்தார்.

### ஐக்கியத்தின் வழி நின்றவர்

"ஐக்கிய சங்கங்களை நடத்தும் பலருக்கு இயற்கையாயுள்ள ஐக்கியக் கொள்கைகள் தெரிந்திருந்தும் சமூக ஐக்கிய கொள்கைகளினதும் ஐக்கியப் பொருளாதாரக் கொள்கைகளினதும் விபரமும் சாதனையும் பொதுவாய் அவர்களிடத்தில் இல்லையெனலாம். கொள்கைகளை அறிந்திருந்தால் மாத்திரம் போதாது. கொள்கைகளைச் சாதனையில் கொண்டுவர வேண்டும்.'' இது அமரர்

(5-ம் பக்கம் பார்க்க)

— மு. வாமதேவன்

## இன்று கஜமுக சூரசம்ஹாரம்

யாழ், வெள்ளி

திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீவீரகத்தி விநாயகர் கோயில பிள்ளையார் கதையினை முன்னிட்டு கஜமுக சூரசம்ஹாரம் இன்று மாலை 5மணிக்கு நடைபெறவுள்ளது (ஊ)

## நாளை புராணபடன பூர்த்தி விழா

யாழ், வெள்ளி

திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தி பிள்ளையார் கோவிலில் வெருங்கதை புராணபடன பூர்த்தி விழா நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது, இதனை முன்னிட்டு விஷேட அபிஷேகம் பூசைகள், அன்னதானம் முதலியவை இடம்பெறவுள்ளன. (ஊ)

## பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம் வெள்ளி

தெல்லிப்பழை தென் மேற்கு கிராமோதய சுகாதார நிலையத்தின் பொதுக்கூட்டம் நாளை காலை நடைபெறவுள்ளது,

இக்கூட்டத்தில் பிரதம அதிதியாக சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ தெய்வேந்திரன் கலந்துகொள்வார், [வா]

## நீயெங்கு சென்று விட்டாய்?

அடிமையாய் தமிழ் மாந்தர் இந்த நாட்டில்
அடைகின்ற கொடுமைகளைக் கண்டே நீயும்
துடித்திட்டாய்! சுதந்திரத் தமீட்டெடுக்கத்
தூயவழி தொடர்ந்திட்டாய்! ஈழம் காணும்
வடிவான இலட்சியத்தை வாழ்க்கை யாக்கி
வருமதிகள் நோக்காது பணிகள் செய்தாய்
இடியாக உன்பிரிவுச் செய்தி தந்தே
இளம்புலியே! நீயெங்கு சென்று விட்டாய்?

களமாடப் புறப்பட்டாய் திறமை கண்டு
காசினியே காதலுடன் அழைக்கும் சிற்றம்
பலமாக வாழ்ந்திட்டாய்! மூதூர் என்னும்
பதியாண்ட மன்னவனாய் பவனி வந்தாய்!
விலைமதிக்க முடியாதுன் வீரத் திற்கு
விரும்பியதோ உன்உடலை மூதூர் மண்ணும்?
அழவைத்தாய்? தமிழ் மாந்தர் தூய நெஞ்சில்
அகலாத இடம் பெற்றாய்! அமரன் ஆனாய்!

அச்சமென்ற வார்த்தையினை அறியா வேங்கை!
அருந்தமிழை அரசோச்சச் செய்வேன் என்று,
உச்சியிலே சுடங்கைக் கொண்டு உழைத்த தீரா!
உறங்காத சிந்தனைகள் உடைய வீரா!
கச்சிதமாய் செயற்பட்டாய்! மேஜர் ஆனாய்!
'கணேஸ்' என்ற பெயரோடு கடைசி மட்டும்
மெச்சிடவே பணிசெய்தாய்! இதனாற் றானோ,
மேலவர்கள் உனையங்கு அழைத்துக்கொண்டார்?

— கவிஞர் மோகனன்

## கோப்பாய் உ. அ. பிரிவு:

# வர்த்தக நிறுவனங்களுக்கு ஈ. பி ஆர். எல். எவ். வேண்டுகோள்

யாழ்ப்பாணம், வெள்ளி

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கான வர்த்தக நிறுவனங்களின் அளவை, நிறுவை கருவிகளுக்கான முத்திரையிடல் வேலைகள் நேற்று ஆரம்பித்து இம்மாதம் 16-ம் திகதி வரை நடைபெறுமென உதவி உணவு ஆணையாளர் அறிவித்துள்ளார். ஆகவே இம் முத்திரையிடலுக்கு கோப்பாய் உ. அ. அதிபர் பிரிவிலுள்ள சகல வர்த்தக நிறுவனங்களையும் ஒத்துழைப்பு வழங்குமாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் விலைக் கட்டுப்பாட்டுக் கண்காணிப்புக் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

பாவனையாளர் தாம் கொடுக்கும் பணத்திற்கு சரியான அளவு பொருட்களைப் பெற்றுக்கொள்கிறார்களா என்பதை உறுதிப்படுத்தவும், வர்த்தகர் தமது கருவிகள் ஒழுங்கானவையா? என்பதைத் தெரிந்துகொள்வதற்காகவுமே இம் முத்திரையிடல் வேலை நடத்தப்படுவதாகவும் கண்காணிப்புக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (ஒ)

## ஜி. சி. ஈ.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இணைப்பு நிலையங்களும் யாழ் கல்வித் திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

யாழ். இந்துக்கல்லூரியும், பலாலி முகாமும் பிராந்திய இணைப்பு சேகரிப்பு நிலையங்களாக இயங்கவுள்ளன.

தீவுப்பகுதிப் பரீட்சார்த்திகளுக்கான பரீட்சை வினாத்தாள்கள் யாவும் ஹெலிகொப்டர் மூலம் பலாலி முகாமிலிருந்து நயினாதீவு முகாமிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நயினாதீவு முகாமிலிருந்து வினாத்தாள்கள் யாவும் தீவப் பகுதியிலுள்ள பரீட்சை மண்டபங்களுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன.

யாழ். கோட்டை இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் எந்நேரத்திலும் "ஷெல்" தாக்குதலில் ஈடுபடலாம் என்பதால், யாழ் வேம்படி மகளிர் கல்லூரி, யாழ் மத்திய கல்லூரி மாணவர்களுக்காக யாழ் கன்னியர் மடம் மகா வித்தியாலயம், வண்ணை நாவலர் வித்தியாலயம் ஆகிய கல்லூரிகளில் பரீட்சை மண்டபங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இன்று ஆரம்பமாகி 13ம் திகதி வரை நடைபெறவிருக்கும் இப்பரீட்சையை ஒட்டி அசம்பாவிதங்கள் ஏதும் ஏற்படாவண்ணம் கண்காணிப்புக் குழுக்களை அமைப்பதற்கு யாழ் கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. பரீட்சை நிலையங்கள் ஒவ்வொன்றிலும், பரீட்சை நோக்கிக் கண்காணிப்பில் ஈடுபடும் இக்குழுவில் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களும் இடம்பெற்றுள்ளனர். [வா]

# தகுந்த அத்தாட்சிகளைக் காட்டி பெற்றுக்கொள்ளவும்

யாழ்ப்பாணம், வெள்ளி

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரால் 8 சைக்கிள்கள் மீட்கப்பட்டுள்ளன. இச் சைக்கிள்களை உரியவர்கள் தகுந்த அத்தாட்சிகளைக்காட்டி விடுதலைப் புலிகள் யாழ் பிரதேச பொறுப்பாளரிடம் அல்லது விடுதலை புலிகளின் முகாமில் சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட எட்டுச் சைக்கிள்களின் விபரங்கள் 003 AD7068 (ஏஷியா) A 421676 ஹீரோ], 57085 கிங், DE 7844 4. 007 AD 693 (ஏஷியா) V H 69663 (ஹீரோ) இலக்கம் அழிக்கப்பட்ட இரு சைக்கிள்கள் ஒன்று ரட்ஜ் மற்றையது ரலி சைக்கிள்.

## திருமலையில் அகதிகளை

# இராணுவ முகாமருகில் இடமாற்ற நடவடிக்கை?

யாழ்ப்பாணம். வெள்ளி.

திருமலை மாவட்டத்திலுள்ள கச்சவெளி, கன்னியா, பன்குளம் ஆகிய இடங்களிலுள்ள அகதிமுகாம்களை அங்குள்ள ராணுவ முகாம்களுக்கருகில் இடமாற்ற உயர்மட்ட ஆலோசனை நடைபெற்று வருவதாக நம்பகரமான வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

அடுத்தாண்டு ஜனவரி முதல் இவ்விடமாற்றம் இடம்பெறலாம். ராணுவமுகாம்களின் பாதுகாப்புக்கருதியே இந்நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் இவ்வட்டாரங்கள் மூலம் தெரியவருகிறது.

## பரந்தன்

# இந்துமகா வித்தியாலயத்தில் தோற்றவேண்டும்

கிளிநொச்சி, வெள்ளி.

கிளிநொச்சி சென். திரேசா மகளிர் மகாவித்தியாலயத்தில் க. பொ. த. (சாதாரண) பரீட்சைக்குத் தோற்றவிருந்த சென் திரேசா மகளிர் மகா வித்தியாலயம் கிளிநொச்சி கனிஷ்ட வித்தியாலய பரீட்சார்த்திகளும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் பரந்தன் இந்துமகாவித்தியாலயத்தில் தோற்றவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட பெற்றோர், மாணவர் பிரஜைகள்குழு ஆகியோர்விடுத்த வேண்டுகோளை ஏற்று கிளிநொச்சி மாவட்ட கல்விப்பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூர் மேற்படி நடவடிக்கையை எடுத்துள்ளார்.

மேலும் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் பரீட்சைக்குத்தோற்ற இருந்த கிளிநொச்சி மகாவித்தியாலயம், கனகபுரம், அ. த. க. பாடசாலை, அக்கராயன் மகாவித்தியாலயம், கனகாம்பிகைகுளம் அ. த. க. பாடசாலை ஆகியவற்றைச்சேர்ந்த பரீட்சார்த்திகள்யாவரும்கிளிநொச்சி இந்து மகாவித்தியாலயத்தில் அமைந்த 2ம் இலக்க பரீட்சை மண்டபத்திற்கு பரீட்சைக்காகத் தோற்றல் வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## யாருடையது

யாழ்ப்பாணம் 19 நவீன சந்தையைச் சேர்ந்த திரு ஆர். சண்முகநாதன் என்பவர் வணபிதா ஜே எம். ஜெயச்சந்திரனுக்குரிய இலங்கை வங்கி கொழும்பு நகரக்கிளையின் காசோலை ஒன்றைக்கண்டு எடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டி அலுவலக நேரத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

## ஐ நா சங்கம்

ஊர்காவற்றுறை, வியா:

வடக்கு நாரந்தனை ஐ நா. சங்க வருடாந்தக்கூட்டம் நடைபெற்றது. தலைவர் திரு. அரியநாயகம், உபதலைவர் திரு பே. கஸ்பார், செயலாளர் திரு செ ஜோர்ஜ். பொருளாளர் திரு பெ.தம்பிராசா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

## இஸ்ரேல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேறு எவரும் பாராளுமன்ற உரைகள், நிகழ்வுகள் சம்பந்தமான குறிப்புகள் எடுக்க முடியாது. அவ்வாறு வேறு எவரும் குறிப்புகள் எடுப்பதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

வெளிவிவகார அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தின் போது சபாநாயகர் கலரியிலிருந்து வெளிநாட்டுத் தூதுவர் ஆலய அதிகாரிகள் குறிப்பு எடுத்ததை பற்றி லஷ்மன் ஜயக்கொடி சபாநாயகரின் கவனத்துக்கு கொண்டு வந்தார். இவ்வாறு அவர்கள் குறிப்பு எடுப்பது பாராளுமன்றத்தின் சிறப்புரிமையை மீறுவதாகுமென அவர் குறிப்பிட்டார் அது தொடர்பாகச் சபாநாயகர் தீர்ப்பு வழங்கினார்:

சபாநாயகர் தனது தீர்ப்பின் போது மேலும் கூறியதாவது-

எந்தவொரு தூதுவராலய அதிகாரிகளும் இச் சபைக்கு வந்து சபை நிகழ்வுகள், சபையில் ஆற்றும் உரைகள் பற்றிக் குறிப்பெடுக்க முடியாது. அது சட்டப்படி அனுமதிக்க முடியாது. (கூ - கே)

## கூட்டுறவால்

(4-ம் பக்கத் தொடர்ச்சி

வீரசிங்கத்தின் ஐக்கியக் கொள்கைகள் பற்றிய வரைவிலக்கணமாகும் இந்த வரைவிலக்கணத்தை இன்றைய கூட்டுறவாளர்கள் அவசியம் கடைப்பிடிக்க வேண்டும்.

## வடக்கில்..

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

படத்தக்க விடயமாகும்."

இவ்வாறு, 'விஜே' குழுவினருடன் இன்று யாழ்ப்பாணம் வரவுள்ள வவுனியா விகாரையின் பிரதம குரு வண விமலதார தேரோ எமது நிருபருக்களித்த விசேட பேட்டியின் போது குறிப்பிட்டார்.

அவர் தமது பேட்டியில் மேலும் கூறியதாவது எம்மை வடக்கு செல்ல அனுமதியளித்தால், நாம் அங்குள்ள உண்மை நிலையை தென்பகுதி மக்களுக்கு தெரிவித்து விடுவோம என இலங்கை அரசு அஞ்சுவது போல்தோன்றுகிறது. அரசியல், மதசார்பற்ற முறையில் சமாதானத்தை விரும்பும் பிக்குவாகவே நான் அங்கு செல்கின்றேன்.' (ஊ)

## விஜே...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்புகொண்ட அனுராதபுரம் ராணுவ முகாம் உயர் அதிகாரி மேஜர் கருணாரத்தின இவர்களை அனுராதபுரத்தைத் தாண்டிச் செல்லவேண்டாமெனப் பணித்ததுடன், திரு.குமாரணதுங்கவை கொழும்பு சென்று ஜனாதிபதியை அவரது செயலகத்தில் சந்திக்குமாறு உத்தரவு வந்திருப்பதாகக்கூறினார் 'விஜே' குழுவினர் ஏன் வடக்கே செல்லக்கூடாதென்பதை ஜனாதிபதி 'விஜே'க்கு விளக்குவார் எனவும் அவ்வதிகாரி கூறியுள்ளார் அத்துடன் இக்குழுவினர் தங்கியிருந்த விகாரையின் முன்னால் பொலிஸ் படையொன்றும் நிறுத்திவைக்கப் பட்டிருந்தது

இதனையடுத்து 'விஜே' நேற்று காலை கொழும்பு புறப்பட்டுச் சென்று ஜனாதிபதியைச் சந்தித்தார்

இச்சந்திப்பின் போது யாழ்ப்பாணம் செல்வதற்கான அனுமதியை ஜனாதிபதி அமைச்சர் லலித் ஆகியோரிடம் பெற்றுக்கொண்டு விஜே நேற்று நண்பகல் ஒன்றரை மணியளவில் கொழும்பிலிருந்து அனுராதபுரம் நோக்கி மீண்டும் புறப்பட்டார்.

## புல்லுமலை ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை இம்முகாம் நிர்வாகத்திற்குட்பட்ட பகுதியில் அண்மையில் 20பேர் சுட்டுக் கொல்லப்பட்டது பற்றியும் 21 பேர் காணாமல் போனது பற்றியும் அம்முகாமைச் சேர்ந்த கேர்ணல் ராணுவத்தவிசாரணைகளை மேற்கொண்டு வருகிறார். (ஊ)

## ஆனையிறவு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டுத் தளபதி திரு. கிட்டு. விஜே குழுவினருக்கு அறிமுகம் செய்து வைக்கப்படுவார். இதனைத் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் இடம்பெறும். (மா)

## இன்றைய பயணம்

இன்று காலை அனுராதபுரத்திலிருந்து புறப்படும் 'விஜே' குழுவினர் வவனியாவில் தமது காலை ஆகாரத்தை அருந்துவர் பின்னர் அங்கிருந்து புறப்பட்டு யாழ்ப்பணத்தை இன்று மாலை வந்தடையவுள்ளனர்

## வவுனியா பிக்குவும் பயணம்!

விஜே குழுவினருடன் வவுனியா விகாரையின் பிரதம பிக்கு வண சியாம்பலகஸ்யல விமலகார தேரோவும் யாழ் வரவுள்ளார் இவர் எமது நிருபருக்களித்த விசேடபேட்டியின் போது தாம் யாழ்ப்பாணத்தல் ஒரு நாள் தங்கியிருக்கப் போவதாகவும் அவ்வேளை விடுதலைப் புலிகள் இயக்கத்தினருடன் பேச்சுவார்த்தையிலீடுபடுவேன் எனவும் கூறினார். (ஊ)

## சர்வோதய..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தானம் (வயது 24 பன்னுமுனையைச் சேர்ந்தவர்) இவருக்கு கையில் காயமேற்பட்டது. இவர் படையினரால் அவர்களது முகாமுக்குக்கொண்டு செல்லப்பட்டார், காயமடைந்த மற்றையவர் மட்டு மாவட்ட சர்வோதய வீடமைப்புப் புனர்வாழ்வு இணைப்பாளராவார். முதுகில் காயமேற்பட்ட இவரை படையினர் அவ்விடத்திலேயே விட்டுச்சென்றனர். பின்னர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இப்பாடசாலையில் ஆண், பெண் உட்பட சுமார் 35பேர் சிரமதானப்பணியி ஈடுபட்டிருந்தனர் துப்பாக்கிச்சூட்டுச் சத்தங்களைக் கேட்டு ஏனையோர் நாலாபுறமும் சிதறியோடினர்

இச்சம்பவத்தினை மட்டு மாவட்ட சர்வோதய இணைப்பாளர் ஜனாப் சாப்தீன் பிரஜைகள் குழுச் செயலாளர் திரு சாம் தம்பிமுத்துவுக்கு உடனடியாக புகார் செய்ததினையடுத்து திரு தம்பிமுத்து மட்டக்களப்பு பொலிஸ் அத்தியட்சகருடன் தொடர்பு கொண்டார். இதனையடுத்து திரு சந்தானம் விடுவிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்

சர்வோதய தலைவர் கலாநிதி ஆரியரத்னவிற்கு இது பற்றி ஜனாப் சாப்தீன் தொலைபேசியில அறிவித்துள்ளார். (ஊ)


லிடோ
10-30, 3-30, 4-30, 6-30
Yul Brynner,
Steven Mcqueen
in
MAGNIFICENT
SEVEN
[Attack And Action]

அநேகரின்
வேண்டுகோளுக்கிணங்க
வெலிங்டன் திரையில்
10-30, 2-30- 6-30
பிரேம்நஸீர் - முரளி
Lஷ் ஜயலட்சுமி-
திருக்குருச்சி நடித்த
யேசுநாதர்
12 முதல்
TOO HOT TO HANDLE
[Adults only]

மிது வீடியோ மூவீசாரின்
இன்றைய வெளியீடு
★ ராதாரவி ✶ நவினு
✶ பி. எஸ். வீரப்பா நடித்த
பி. எஸ். வீரப்பாவின்
ஓடங்கள்
(தரமான பிரதி)
மிது வீடியோ மூவீஸ்,
பிரதான வீதி,
சித்தங்கேணி.
[A-3193]

மே (f) பெயர்
புதிய பாடல் வெளியீடுகள்
1. நம்மஊரு நல்லஊரு [L. P.]
2. மண்ணுக்குள் வைரம் [L. P.]
3. ஒரு இனிய உதயம் [L. P.]
மே (F) பெயர்
108, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
பாரத் சென்ரர்
178, புதிய சந்தை, யாழ்ப்பாணம்.
[C-6192]




சிங்கப்பூரில் பொது இடங்களிலும் பஸ்ஸிலும் புகைபிடிப்பது சட்டப்படி குற்றமாகும். புகைபிடிப்பதற்கு என்றே ஒரு இடத்தை ஒதுக்கியிருக்கின்றது சிங்கை அரசு. ஒரு ஆண்டில் 5 கோடி சிகரெட்டுக்கள் சிங்கப்பூரில் விற்பனையாவதுபற்றி அரசு கவலை கொண்டுள்ளது. பாவனையாளரின் ஆடம்பரப்பொருளாகச் சிகரெட் கருதப்படுகின்றது

பாவனையாளர் பாதுகாப்புச் சட்டம் என ஒரு சட்டம் இலங்கையில் உண்டு! இதன்படி சிகரெட் அத்தியாவசிய பொருள். பல கோடி சிகரெட்டுக்களை தமிழ் மக்களும் ஊதித்தள்ளுகின்றார்கள்!

வெள்ளிக்கிழமை விரதம் பிடிப்பதுபோல் கிழமையில் ஒருநாள் இக்குடியை நிற்பாட்டினால் என்ன? அதில் கிடைக்கும் வருமானத்தை அகதிகட்குச் செலவழிக்கலாம். சிகரட்பிரியர்களுக்கு இது சமர்ப்பணம்!

பாணபத்திரன்

## படிப்பகங்கள் அவசியம்

மாவிட்டபுரம், வியா.

"மக்களின் அறிவு விருத்திக்கு படிப்பகங்கள் மிகவும் அவசியமானவை, ஆனால் திறப்பு விழாக்களுடன் இவை நின்று விடலாமல் பல ஆண்டு விழாக்களை கொண்டாடி தொடர்ந்து சிறப்பாக செயல்படவேண்டும்."

இவ்வாறு மயிலிட்டி 6ம் வட்டாரத்தில் செனட். மேரில் படிப்பகத்தை திறந்து வைத்துப் பேசிய மயிலிட்டி பங்குத்தந்தை அருட் திரு சந்தியாப்பிள்ளை அடிகள் கூறினார்.

படிப்பகத்தலைவர் திரு. மரிசெலின் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

## 'ஊற்று' இடமாற்றம்

நல்லூர்.வியா.

திருநெல்வேலி மாரிஅம்மன் வீதியில் கடந்த பல ஆண்டுகளாக இயங்கி வந்த 'ஊற்று' நிறுவனம் தற்போது திருநெல்வேலி பலாலிவீதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

இந் நிறுவனம் கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக எமது பிரதேசத்திலுள்ள பொருளாதார, சமூக அபிவிருத்தி ஆய்வு வேலைகளில் ஈடுபட்டு வருகிறது. மேலும் 1972ம் ஆண்டு முதல் 'ஊற்று' சஞ்சிகையையும் தொடர்ந்து வெளியிட்டுவருகிறது, கடந்த சில ஆண்டுகளாக இந் நிறுவனத்தின் செயலாளராகக் கடமையாற்றிய திரு கிருஷ்ணானந்தசிவம் கடந்த அக்டோபர் மாதத்திலிருந்து தமது பதவியிலிருந்து விலகியுள்ளார் தற்போது வி. பி. சிவநாதன் செயலாளராகவும், நிர்வாகச் செயலாளராக சி. எஸ் ஆனந்தனும் பொறுப்பேற்றுள்ளனர். [ஊ]

## புதிய உறுப்பினர்கள்

வல்வெட்டித்துறை, வியா

இமையாணன் கிழக்கு ஐக்கியநாணய சங்க உத்தியோகத்தர் தெரிவு இமையாணன் அறிவாலயம் சனசமூக நிலையத்தில் நிலைய தலைவர் திரு வ. சி மகேந்திரன் தலைமை நடை பெற்றது.

இத் தெரிவு கூட்டுறவு உத்தியோகத்தர் திரு. சி மோ சிவமயம் அவர்கள் மேற்பார்வையில் நடந்தது. பின்வருவோர் தெரிவாகினர்.

தலைவர்; திரு. ஞா தெய்வநாதன், உபதலைவர் சு. அரசலிங்கம், செயலாளர்: சி இராசதுரை, பொருளாளர்: திரு ம. வைரமுத்து மற்றும் நிர்வாக உறுப்பினர்களும் தெரிவாகினர். [ஊ]

## இன்றைய பலன்

திகதி: 9 [5-12-1986]
மாதம்: கார்த்திகை
நட்சத்திரம்: உத்தராடம்
கிழமை: வெள்ளிக்கிழமை
திதி: சதுர்த்தி

மேடம்: இதயச்சுமை அகலும். வசதிகள் பெருகும். வரவிலும் திருப்தியுண்டு.

இடபம்: நினைத்ததில் தடை நிம்மதி பிறக்கும். பொருளும் தவறக்கூடும். நிதானம் அவசியம்

மிதுனம்: நினைத்ததில் தடை. நிம்மதி பறக்கும். நிதானம் அவசியம்.

கடகம்: களத்திரம் கைகூடும். கண்ணியம் விரைந்து வரும். தொழிலிலும் புதிய வாய்ப்பு உருவாகும்.

சிங்கம்: வேண்டாத உறவுகளைத் துண்டித்தல் நன்று. குடும்பத்திலும் பூசல்கள் தோன்றும். நிதானத்துடனும் அமைதியுடனும் நடந்து கொள்ளவும்.

கன்னி: மனதுக்கு மகிழ்ச்சியூட்டும் சம்பவம் இடம் பெறும். பிதாவின் ஆதரவும் கிடைக்கும். நிதியில்நல்ல அபிவிருத்தி காணப்படும்.

துலாம்: தேடியபொருள் காலடியில் கிட்டும். இதயத்தில் இனிமை துளிரும். பயணங்களும் இடமாற்றங்களும் இடம் பெறும்

விருச்சிகம்: முதியவர் ஒருவர் உமக்கு நல்வழி காட்டுவர். வாழ்விலும் ஒளிவீசும் போதுமென்ற மனத்துடன் வாழ்வீர்கள்.

தனுசு: வியாபாரத்துறையில் பிணக்குகள் தோன்றும் சிந்தையில் குழப்பம் தோன்றும். பிறருடன் அவதானமாகப் பழகவும்.

மகரம்: தனிவழிப்பயணத்தைத் தவிர்க்கவும். கணவன் மனைவி உறவில் வெடிப்பு தோன்றும். செய்தொழிலிலும் சிரமங்கள் தோன்றும்.

கும்பம்: குடும்ப வாழ்க்கையில் தென்றல் வீசும். நன்மையான சுப காரியமும் இடம் பெறலாம் கடமையில் சம விருத்தி ஏற்படும்.

மீனம்: ஏமாற்றத்தின் தாக்குதல் உங்களுக்குச் சோர்வைத்தரும். சகோதர மனஸ்தாபமும் உருவாகும். ஆத்திரத்தை அடக்கவும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## பாலங்கள் திருத்தம்

ஒட்டுசுட்டான், வியா

முல்லைத்தீவு - மாங்குளம் வீதியிலும் முல்லைத்தீவு - பரந்தன் வீதியிலும் உள்ள முக்கியமான பாலங்கள் தற்பொழுது பெருந்தெருக்கள் திணைக்களத்தினால் திருத்தவேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## பரிசளிப்பும் கலைவிழாவும்

யாழ்ப்பாணம்,வெள்ளி

நவீன ஈஸ்வரி சிறுவர் பாடசாலை பரிசளிப்பு விழாவும், கலைவிழாவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை மாவிட்டபுரம் வீமன்காமம் மகாவித்தியாலயத்தில் பிரம்ஸ்ரீ து சுந்தரமூர்த்தி ஐயர் தலைமையில் நடைபெறவுள்ளது

இவ்விழாவில் பிரதம அதிதியாக யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு இரா சுந்தரலிங்கம் கலந்து கொள்வார். [சி]

## புதிய உறுப்பினர்

சண்டிலிப்பாய், வியா

நவாலி பிரஜைகள் குழுவின் பொதுச்சபைக் கூட்டம் அண்மையில் கழகத் தலைவர் திரு சி. ஜே. ஜெயதம்பி தலைமையில் நவாலி வை. எம். சி ஏ மண்டபத்தில் நடைபெற்றது.

புதுவருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் வைத்தியகலாநிதி என். சரவணபவன், உப தலைவர் திரு. எம், பாலநாதன், செயலாளர் திரு. யோ. சின்னத்துரை, உபசெயலாளர் திரு. ஆ. முத்துக்குமாரு பொருளாளர் திரு. சி.கணேசலிங்கம்.

இத்துடன் 13 பேர் கொண்ட நிர்வாக உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## சேவையிலிருந்து ஓய்வு

நெல்லியடி. வியாழன்

கரவெட்டி திருஇருதயக் கல்லூரியில் 15 ஆண்டுகளாக சங்கீத ஆசிரியையாகப் பணிபுரிந்த திருமதி அக்னெஸ் இராசம்மா மரியாம்பிள்ளை சேவை ஓய்வு பெற்றுள்ளார். ஆசிரிய சேவையில் 32 ஆண்டுகளை இவர் பூர்த்தி செய்துள்ளார்.

இவர் கரவெட்டி றோமன் கத்தோலிக்க தமிழ் பாடசாலையில் கல்வி கற்று கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்றப்பட்ட ஆசிரியரானார், தமது ஆசிரியத் தொழிலை முதலில் யாழ் மறைமாவட்ட கத்தோலிக்க பாடசாலைகளில் மேற்கொண்டு 7 ஆண்டுகளின் பின் தமிழ் நாடு அண்ணாமலைப் பல்கலை கழகத்தில் சேர்ந்து சங்கீத பூஷணம் பட்டம் பெற்றார்,

இவரது சேவைநலப் பாராட்டு வைபவம் திரு இருதயக் கல்லூரியில் இடம்பெற்றது.

## புனரமைக்க நடவடிக்கை

மாவிட்டபுரம், வியா

ஐக்கிய நாணய சங்கங்களிடம பல பொறுப்புக்கள் ஒப்படைக்கப் படவுள்ளதை அடுத்து வலி வடக்குப் பகுதியில் அவற்றைப் புனரமைக்கவும் புதிதாக அமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வீடமைப்புக் கடன் வழங்குதல் கடன்களை வசூலித்தல் போன்ற பல பொறுப்புக்களை ஐக்கிய நாணய சங்கங்களிடம ஒப்படைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து வலி வடக்குப் பகுதியில் ஐக்கிய நாணய சங்கங்களை புனரமைக்கவும் புதிதாக அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வலி வடக்கு உதவி அரசாங்க அதிபர் செல்வி மைதிலி சோமசுந்தரம் தெல்லிப்பழைப் பகுதி கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு பி. இரத்தினசபாபதி ஆகியோர் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

## தமிழ், சிங்கள———
# வர்த்தகர்கள் கடத்தப்பட்டு விசாரணையின்பின் விடுதலை

ஒட்டுசுட்டான், வியா

தென் பகுதியைச் சேர்ந்த சிங்களவர் ஒருவரும் வடபகுதியைச் சேர்ந்த தமிழர் ஒருவரும் கூட்டாக தேங்காய் வியாபாரம் செய்ய நெடுங்கேணிக்கு வந்தசமயம் தமிழீழ விடுதலைப் புலிகளினால் கைதுசெய்யப்பட்டு விசாரணைகளின் பின் விடுதலை செய்யப்பட்டனர் இச்சம்பவம் அண்மையில் இடம்பெற்றது

இதுபற்றி மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

கொழும்பு ஜவார்ஜி பிறதேஸ் ஸ்தாபனத்தில் வேலை செய்யும் எஸ். பெரேரா என்பவரும் அதே ஸ்தாபனத்தில் வேலைசெய்யும் எம். சுப்பிரமணியம் என்பவரும் புத்தளத்தில் தேங்காய் வாங்கி லொறியில் கொண்டுவந்து வவுனியாவில் விற்பனைசெய்து விட்டு மிகுதியை நெடுங்கேணிக்குக் கொண்டு வந்தனர் அச்சமயம் இருவரும் கைது செய்து விசாரணை செய்யப்பட்டு சுப்பிரமணியம் உடனே விடுதலை செய்யப்பட்டார்.

பெரேரா மேலதிக விசாரணைக்காக பாசறைக்கு அழைத்துச் செல்லப்பட்டு தீவிர விசாரணையின் பின்பு அவர் ஸ்ரீலங்கா அரசின் உளவாளியல்ல என்பதை அறிந்த விடுதலைப் புலிகள் மூன்றுவளை வர்த்தகஸ்தாபனங்கள்,பொது மக்கள் முன்னிலையில் விடுதலை செய்தனர்.

விடுதலை செய்யும்பொழுது புலிகள் நாங்கள் சிங்களவருக்கு எதிரிகளல்ல என்றும் அரசாங்கத்திற்கே எதிரிகள் என்றும் தெரிவித்தனர்.

## கலை கலாசாரம்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கதை, கட்டுரை, கவிதை போன்றவற்றை சஞ்சிகையில் எழுதி முதன்மை பெற்றவர்களுக்கும் ஓவிய கலைஞருக்கும் பிரதம விருந்தினர் பரிசுகளை வழங்கினார்.

கவிஞன் சஞ்சிகைக்குழு செயலாளர் செல்வன் பா. பாலச்சந்திரன் நன்றியுரை கூறினார். [ஊ]

## சிவதீட்சை

யாழ்ப்பாணம், வெள்ளி

சுன்னாகம் ஸ்ரீகதிரை மலை சிவன் ஆலயத்தில் சிவதீட்சை நாளை வெள்ளிக்கிழமை ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ந. சர்வேஸ்வரகுருக்களால் நடாத்தப்படவுள்ளது

## கடற்படை படகு

நெடுந்தீவு வியா:

நெடுந்தீவு தென் மேற்குக் கடற்பகுதியில் பாரிய கடற்படைக்கப்பலொன்று நங்கூரம் இட்டுள்ளது:

கடற்படைப் படகுகளும் பீரங்கிப்படகுகளும் அதிவிசைத்துப்படகுகளும் அக்கப்பலுக்கு வந்துசெல்வதைக் காணக்கூடியதாகவுள்ளது.

## யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் வரையறுக்கப்பட்டது

# பதவி வெற்றிடங்கள்

கீழ்க்காணும் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு தகைமையுடைய ஆண்பாலாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் யாவும் 12-12-86க்கு முன்னர் சங்கப் பொதுமுகாமையாளருக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலிலோ, அல்லது நேரடியாகவோ அனுப்புதல் வேண்டும்.

பதவி: 1.

கிளைமுகாமையாளர்
பதவி இல: 208/14

சம்பள அளவுத் திட்டம்: $\frac{195 — 345}{10 \times 10 — 12\ 50 \times 4}$

பதவி வெற்றிட எண்ணிக்கை: 05

தகைமைகள்:

(அ) கூட்டுறவுப் பணியாளர் 15வது சம்மளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 02வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) கூட்டுறவுப் பணியாளர் (சாதாரண தரா) பத்திரம் / க. பொ. த. சாதாரண தரத்தில் 2 அமர்வுக்கு மேற்படாமல், எண்கணிதம் / வர்த்தக எண்ணிதம் / தூய கணிதம், சிங்களம் / தமிழ் பாஷை என்பவற்றினை உள்ளடக்கிய 6 பாடங்களில் சித்தி.

பதவி: 2.

விற்பனையாளர்கள்:
பதவி இல: 308/15

சம்பள அளவுத் திட்டம்; $\frac{180 — 285}{7.50 \times 14}$

பதவி வெற்றிட எண்ணிக்கை. 05

தகைமைகள்:

(அ) கூட்டுறவுப் பணியாளர் (கனிஷ்ட) தராதரம்

அல்லது

(ஆ) 8ம் வகுப்பிலான சித்தியும், விற்பனைத் தொழிலில் 3வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

வயதெல்லை-

18 வருடம் - 24 வருடம் வரை
(சங்க எல்லைப் பரப்பிலுள்ளோர்க்கு முன்னுரிமை வழங்கப்படும்)

பொது முகாமையாளர்.

259, மின்சார நிலையவீதி,
யாழ்ப்பாணம்.
02-12-86. [A 3184]

# DIPLOMA IN NURSING

தாதிப் பயிற்சியில் டிப்ளோமா

5-ம் பகுதிக்கான வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன.

(1-12-86)

ஓராண்டு நிறைவுக்கான சலுகைகள்
இலவச சீன மருத்துவம் அக்குப்பன்சர் (Achupunture)
இலவச ஆங்கில வகுப்புக்கள்.
உடன்

## North Ceylon Technical Institute

14, சென்பீற்றர்ஸ் ஒழுங்கை,
ஆஸ்பத்திரி விதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24355 (A 3216)



மூகவர் நிலையங்களுக்கான அங்கீகாரத்துடன் குடாநாட்டில் தொடர்ந்தும் சேவையாற்றுகின்றோம் என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

## பிரயாண ஒழுங்குகள்

*டென்மார்க் *கனடா
*லண்டன் (U. K.) ★ஜெர்மனி

ஆகியநாடுகளுக்கு எமது முகவர் உடனுக்குடன் உங்களை அழைத்துச் செல்வார்.

சவூதி, குவைத்

கிளீனேர்ஸ், Gardeners, Labourers, Drivers இருப்பிடமும் சாப்பாட்டு வசதிகளுடனும் வருமான ஒழுங்கு கூடிய கெதியில் செய்துதரப்படும்.

சிங்கப்பூர், குவைத்

பெண்களுக்கு வருமான ஒழுங்குகள் இருப்பிடமும் சாப்பாட்டு வசதியுடன் துரித கதியில் செய்து தரப்படும்.

பாஸ்போட். பொண்ட் (BOND), விசா, ரிக்கற் முதலியன துரித கதியில் செய்து தரப்படும்.

## GROUP ATLANTIC TRAVELS

இல. 163, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(அடைக்கலமாதா கோவில் முன்பாக) [A3223]



# வாழ்த்துமடல்கள் வரையும் போட்டி

இப்போட்டி வயதெல்லையை அடிப்படையாக வைத்து மூன்று பிரிவுகளாக யாழ். லியோ கழகத்தினரால் நடாத்தப்பட உள்ளது.

இப்போட்டியின் முக்கிய விதிமுறைகளாவன:

1. தைப்பொங்கல் அல்லது கிறிஸ்மஸ் அல்லது புதுவருட வாழ்த்துக்களையே வரைதல் வேண்டும்.
   இது வழமையான மடல்களைப்போல் முன் பக்கத்தில் படமும் உட்பக்கத்தில் வாழ்த்து வரிகளையும் உள்ளடக்குதல் வேண்டும்.
2. வாழ்த்து மடல்களின் அளவு வயதெல்லைக்கேற்றவாறு வேறுபடும்.
   12 வயதிற்குட்பட்டவர்கள் — 15 c m. X 12 c.m, மட்டை
   12 - 22 வயதெல்லை — 19 c m. X 13 c.m. மட்டை
   22 - 27 வயதெல்லை — 20½ c.m. X 14 c.m. மட்டை
   மேற்படி மட்டைகள் மாத்திரமே எம்மால் வழங்கப்படும்.
3. இப்போட்டிக்கு கொடுக்கப்படும் நேர அளவு இரண்டு மணித்தியாலங்கள் மட்டுமே.
   இப்போட்டிக்கான அனுமதிக்கட்டணம் ரூபா 2/- மட்டுமே.

விண்ணப்பதாரிகள் தமது பெயர், முகவரி, வயது, பாடசாலையில் படிப்பவராயின் பாடசாலையின் பெயர் ஆகிய விபரங்கள் ஒரு தாளில் எழுதி

## "யாழ். லியோ கழகம்"

101, பலாலி வீதி. யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு 10-12-1986 இற்கு முன்பாக அனுப்பி வைக்கவும். [A3191]


## புலமைப்பரிசில் வழங்க முடிவு

உடுவில், வியா

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் இம் மாதம் 19-ம் திகதி நடைபெறவிருக்கும் 7-ம் ஆண்டு பிரவேசப் பரீட்சையில் மிகக் கூடுதலான புள்ளிகளைப் பெறும் 5 மாணவர்களுக்கு புலமைப் பரிசில் நிதியினை வழங்க மேற்படி வித்தியாலய பழைய மாணவர் சங்கம் முடிவு செய்துள்ளனர்.


## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

கொழும்புத்துறை 10 இலந்தைக்குளம் தெரு நாகமுத்து தெய்வேந்திரம் மரணசாதனம் விடயமாக.

மரணமெய்தியவர்.

இல. T. 3993

நாகமுத்து கந்தசாமி. அம்மன் வீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணம் மனுதார்.

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்தவரின்மரணச்சொத்தை நிருபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு மரணசாதனத்தை ஏற்று மரணசாதனப்பிரதி இணைத்த நிர்வாகத் தத்துவப் பத்திரம் வழங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1986ம் ஆண்டு ஐப்பசி மாதம் 3ம் திகதி முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக்கட்டளையை ஏன் முற்றான கட்டளையாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றனர்.

1986ம் ஆண்டு புரட்டாதி மாதம் 16ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி,

கு. குலசிங்கம்,
பதிவாளர்.

தயாரிப்பு:

எம். கே. சுப்பிரமணியம்,
மனுதார் சட்டத்தரணி.

31-10-86

காரணம் காட்டும் திகதி 19-12-86க்கு நீடிக்கப்பட்டது

கு. குலசிங்கம்,
பதிவாளர்.

(C 6057)


## நிதி ஒதுக்கீடு

பண்டத்தரிப்பு, வியா

இளவாலையில் அரசினர் மருந்தச்சாலை ஒன்றை 1987ம் ஆண்டில் நிறுவுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

## நேரில் சென்று பார்வையிட்டார்

சுன்னாகம் வியா

1983ம் ஆண்டு இடம்பெற்ற இனக்கலவரத்தினால் பாதிக்கப்பட்டு சேந்தாங்குளம் 'வாழ்அகம்' கிராமத்தில் குடியேறி உள்ள அகதிகளை வலிவடக்கு உதவி அரசாங்க அதிபர் செல்வி மைதிலி சோமசுந்தரம் நேரில்சென்று பார்வையிட்டு அவர்களின் குறைநிறைகளை விசாரித்தறிந்தார். (வா)


## முதலாண்டு நினைவஞ்சலி



சண்முகம் சோமசுந்தரம்
(புகையிரத உத்தியோகத்தர்)

மறைவு: 18-12-85
திதி: 7-12-86

ஆண்டொன்றாயின ஆனாலும் அன்பு முகம் மறக்கவில்லை!
பண்பாய் எம்மை வளர்த்த பாசமும்- மறையவில்லை.
எத்தனை பிறப்புகள் எடுத்தாலும் உங்களைப் போல் ஒரு தந்தை
நாம் இனிக்காணப்போவதில்லை!

இவரின் ஆத்ம சாந்திக்காக 7-12-86 ஞாயிற்றுக்கிழமை 1-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருக்கும் கிரியையில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் இங்ஙனம்

பனைவி மருமகள், மக்கள் சகோதரர்கள்,
ராஜன்
புகையிரத விடுதி.
வவனியா. C 6188


## மருந்துக்கு தட்டுப்பாடு

சுன்னாகம், வியா

யாழ். மாவட்ட வைத்தியசாலைகளில் விசர்நாய்க்கடிக்குப் போடப்படும் தடுப்பூசி மருந்துக்கு தட்டுப்பாடு நிலவிவருகிறது.

ஏ ஆர் வி என்னும் இத்தடுப்பூசி மருந்து விசர்நாய்க்கடிக்காளானவர்களுக்கு தொடர்ச்சியாக 16 தடவைகள் போடப்பட வேண்டும். தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் இம் மருந்துக்கு நிலவும் தட்டுப்பாட்டினால் விசர்நாய்க்கடிக்காளானவர்கள் பெரிதும் கஷ்டமடைகின்றார்கள்.

## பெற்றோர் தினவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். புனித யோன் பொஸ்கோ வித்தியாலய பெற்றோர் தினவிழா கடந்த செவ்வாய்க்கிழமை பி.ப கொண்டாடப்பட்டது. பாடசாலை அதிபர் சிஸ். ஸ்ரனிஸ்லொஸ் மேரி தலைமையில் நடைபெற்றது. கௌரவ விருந்தினராக யாழ். ஆயர் மாலாணி தியோகுப்பிள்ளை ஆண்டகையும் பிரதம விருந்தினராக பிரதம கல்வி அதிகாரி திரு. கு சோமசுந்தரமும், சிறப்பு விருந்தினராக யாழ், வட்டாரக் கல்வி அதிகாரி திரு இ சிவானந்தனும் கலந்துகொண்டனர்

இவ்விழாவில் 26 நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

சின்னப்பாலரின் சிந்தனைகள், மீனவர் நடனம், ஆங்கில நாடகம், இறைவனின் பராமரிப்பு, வில்லுப்பாட்டு. துள்ளியோடும் மீன் குஞ்சுகள், சிரட்டைஒலி போன்றமாணவர்களின் பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெற்றன

மீனவர் நடனம் யாழ் மீனவர்களின் அவலநிலையையும், குண்டுகளின் ஒலியையும் தெளிவாக எடுத்துக்காட்டியது.

"அன்புள்ள மேய்ப்பான்". "ஒன்றுபட்டால்உண்டுவாழ்வு" ஆகிய இரு நாடகங்களும் இடம் பெற்றன.


## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
தம்பிராசா பராசக்தி

பிறப்பு: 28-3-1925
இறப்பு: 16-11-1985
திதி: 5 12 1986

ஆலமரமாய் அனைவருக்கும் நிழலாய் அவனியில் பவனி வந்து அவனசநிலை தேடி அமரருலகம் சென்ற எங்கள் அன்புத் தெய்வமே உம் நினைவு என்றும் எம் மனதில் நிலைத்திருக்கும். தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்புடன் நினைவுகூரும்!
மகன், மருமகள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர்கள்

த. புவனேஸ்வரன்.
டச்றோட், (பவா)
உடுவில்,
சுன்னாகம் (C 6162)



உ

# திறப்பு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் அக்ஷய வருடம் கார்த்திகை மாசம் 19ஆம் திகதி (15-12-86) வெள்ளிக்கிழமை காலை 7-00 மணி தொடக்கம் 9-00 மணி வரையுள்ள தனுலக்கின சுப முகூர்த்தவேளையில்.

★ ஜெனுடென்ஸ் ★
(காட்சியறையும் - விற்பனை நிலையமும்)

என்னும் ஸ்தாபனம்

இலங்கை வங்கி மாவட்ட முகாமையாளர்
திரு. செ. ஸ்ரீரங்கநாதன்
அவர்களால்

ஆரம்பித்து வைக்கப்படும் என்பதையும் அத்தருணம் தாங்கள் வருகை தந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
கே. கே. எஸ். றோட், ஜெனுடென்ஸ்
இணுவில். (A 3224) இணுவில்.

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

5-12 86 வெள்ளிக்கிழமை

# கட்டுப்பாடுகளை மீறும் வெளிநாட்டுவேலைவாய்ப்பு ஏஜன்ஸிகள் மூடப்படும்

## அமைச்சர் இம்புலான எச்சரிக்கை

கொழும்பு, வியா. கட்டுப்பாடுகளை மீறும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஏஜன்ஸிகளை மூடிவிடுமாறு உத்தரவிடப் போவதாக தொழிலமைச்சர் பி. ஸி இம்புலான எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்குப் பல்வேறு தொகுதிகளிலுமிருந்து ஆட்களைத் திரட்ட வேண்டுமெனத் தொழிலமைச்சர் பி. ஸி இம்புலான கடந்த வெள்ளிக்கிழமை வற்புறுத்திக் கூறினார். இப்படிச் செய்வது சாத்தியமற்றதென ஏஜன்ஸிகள் தெரிவித்ததை அடுத்தே அமைச்சர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

தொழிலமைச்சின் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்யப்பட்ட ஏஜன்ஸிகளை அழைத்துத் தொழிலமைச்சர் கடந்த வெள்ளிக்கிழமை ஒரு ஆலோசனைக் கூட்டம் நடத்தினர்.

சுமார் 65 000 வேலைவாய்ப்புக்கான அனுமதிகளை ஏஜன்ஸிகள் பெற்றிருந்தன. ஆனால் இதுவரை 12,000 பேர் மட்டுமே இந்த ஏஜன்ஸிகள் வேலை வாய்ப்புக்கொடுத்து வெளிநாடுகளுக்கு அனுப்பியுள்ளன. [கே]

## மன்டெலாவுக்கு சர்வதேச சமாதானப் பரிசு

ஸ்ரொக்ஹோம், டிச 4

தென்னாபிரிக்காவில் சிறை வைக்கப்பட்டிருக்கும் கறுப்பினத் தேசியத் தலைவரான திரு நெல்சன் மன்டெலாவுக்கு சமாதானம், சுதந்திரம் ஆகியவற்றுக்கான சர்வதேசப் பரிசு வழங்கப்படவுள்ளது.

சுவீடனின் தொழிற்சங்கமொன்று இப் பரிசை வழங்குகின்றது. திரு. நெல்சன் மன்டெலா தென்னாபிரிக்காவில் இன ஒடுக்குமுறைக்கு எதிராக வாழ்நாள் முழுவதும்போராடி வருகிறார் என அப்பரிசுக்கான பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது

கொலையுண்ட முன்னாள் சுவீடன் பிரதமர் திரு. ஒலப் பால்மேயின் பாரியாரான திருமதி பால்மே இச் சமாதானப் பரிசை எதிர்வரும் சனிக்கிழமை ஸ்ரொக்ஹோமில் வழங்குவார்

சிறையிலுள்ள திரு மன்டெலா சார்பில் அவரது பிரதிநிதி ஒருவர் இப்பரிசைப் பெற்றுக் கொள்வார் எனத் தெரிவிக்கப்பட்டது

## தொண்டமனாறு முகாமில் படையினர் அதிகரிப்பு மக்களிடையே அச்சம்

[கோப்பாய் நிருபர்]

தொண்டமனாறு இராணுவ முகாமிலிருந்து பலத்த தாக்குதல் ஒன்று மேற்கொள்ளப்படலாம் என்ற அச்சம் முகாமைச் சுற்றி வதியும் மக்களிடையே நிலவுகிறது.

கடந்த சனிக்கிழமை தொண்டமனாறு முகாமுக்குச் சென்ற முந்நூறுக்கு மேற்பட்ட இராணுவத்தினருடன் நேற்றுக் காலை காங்கேசன்துறையிலிருந்தும் பலாலியிலிருந்தும் சென்ற நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் திரும்பிச் செல்லாமல் முகாமிலிருப்பதே இந்த அச்சத்திற்கான காரணமாகும்.

தொண்டமனாறு முகாமில் படையினரின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் இராணுவதளபாடங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளது அவதானிக்கக் கூடியதாகவிருக்கிறது.

கடந்த சில தினங்களாக தொண்டமானாறு முகாமை அண்டியுள்ள பகுதிகளில் விமானங்களும், ஹெலிகொப்டர்களும் நோட்டமவிட்டமையும் மக்களின் அச்சத்தை மேலும் அதிகரித்துள்ளது. [ஒ

## 1987ல் ஓய்வூதியம் வழங்கும் திகதிகள்

[கொழும்பு]

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தர்கள், வங்கி ஊழியர்களுக்கு அடுத்த வருடம் ஓய்வூதியம்வழங்குவதற்கான திகதிகள் குறிப்பிட்டு ஓய்வூதியத் திணைக்களம் சுற்று நிருபம் ஒன்றை விடுத்துள்ளது. இச் சுற்றுநிருபம் சகல அரசாங்க அதிகாரிகளுக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுளளது.

அத்திகதிகள் பின்வருமாறு:-

ஜனவரி 8, பெப்ருவரி 11, மார்ச் 12, ஏப்ரல் 7, மே 7, ஜூன் 9, ஜூலை 15 ஆகஸ்ட் 13, செப்டெம்பர் 15. ஒக்டோபர் 15, நவம்பர் 12, டிசம்பர் 15.

## புங்குடுதீவு கடற் பிராந்தியத்தில் தீவிர ரோந்து

புங்குடுதீவு, வியாழன்

புங்குடுதீவு கடற்பிராந்தியத்தில் கடந்த சில நாட்களாக கடற்படையினரின் பாரிய கறுப்புநிற கப்பல்கள் நங்கூரமிட்டும், விசைப்படகுகளின் ரோந்து சேவைகளும் தீவிரப்படுத்தப் பட்டுள்ளது.

இக்கப்பல்கள் இரவுவேளைகளில் வெளிச்சங்களை பரப்பிய வண்ணம் இப்பகுதிகளில் ரோந்து புரிந்து வருகின்றன.

இக்கப்பல்களின் நடமாட்டத்தால் இங்குள்ள கடற்றொழிலாளர்கள் மீன்பிடிக்கச் செல்வதற்கு அஞ்சுகின்றார்கள். (ஒ)

## 10 பேர் விடுதலை

மன்னார், புதன்

தலைமன்னார் தென் கடலில் வைத்து படகு ஒன்றில் கைது செய்யப்பட்ட தமிழ் அகதிகளில் மேலும் பத்துப் பேரை அண்மையில் தள்ளாடி முகாம் இராணுவத்தினர் விசாரணையை முடித்து மன்னார் அரசாங்க அதிபரிடம் கையளித்தனர்.

இவர்களை அரச அதிபர் தத்தம் சொந்த இடங்களுக்குப் பிரயாண வசதிகளை ஏற்படுத்தி அனுப்பி வைத்தார். இதற்கு முனபும் 13 தமிழ் அகதிகள் விடுதலை செய்யப்பட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## மாங்குளத்தில — கைதானவர்கள் பூஸாவிற்கு கொண்டுசெல்லப்பட்டனர்

ஒட்டுசுட்டான், வியாழன்.

மாங்குளம் பகுதி இராணுவத்தினரால் அண்மையில் சுற்றிவளைக்கப்பட்டபோது கைது செய்யப்பட்டவர்களில் பா. வரதநாதன் (22-வயது), பா. வீரவண்ணன் (19 வயது), பா. யோகநாதன் (20-வயது), க. கண்ணன் (வயது-22), ச. சாமுவேல் [40-வயது] ஆகியோர் விசாரணையின்பின் பூஸாமுகாமிற்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளனர்.

இவர்களின் பெற்றோர் முல்லை அரச அதிபரிடமும் முல்லை. மாவட்ட பிரஜைகள் குழுவிடமும் இக்கைது குறித்து முறையிட்டுள்ளனர்

இதேவேளை சில பெற்றோர்கள் அரச அதிபரிடம் அத்தாட்சி கடிதம் பெற்று பூஸா முகாமிற்குச் சென்றுள்ளனர். (ஒ)

## மக்கள் கலையரங்கு நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

மக்கள் கலையரங்கம் நடத்தும் கலை நிகழ்ச்சிகள் நாளை சனிக்கிழமை இணுவில் கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் அருணா இசைக்குழுவினரின் எழுச்சி கீதங்களும், கே. நவரத்தினத்தின் 'வெடிப் புழுகு' என்ற நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளது.

இரு வாரங்களுக்கு ஒரு தடவை இந்த நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. [ஒ]

## இனப் பிரச்னைக்கு சமாதானத்தீர்வு வேண்டும் அமைச்சர் இம்புலான

[கொழும்பு]

"இனப் பிரச்னையைச் சமாதான முறையிலேயே தீர்க்க வேண்டும். யுத்தத்தின் மூலமாகவோ அல்லது துப்பாக்கி வேட்டுக்கள் மூலமாகவோ தீர்க்க முடியாது. அப்படிச் செய்வதானால் அது எங்கு முடியுமோ தெரியாது! பொறுமையாகவிருந்து இப் பிரச்னையைத்தீர்த்துக்கொள்ள வேண்டும்".

தொழிலமைச்சர் பி. ஸி இம்புலான நேற்றுப் பாராளுமன்றத்தில் இவ்வாறு கூறினார். தொழிலமைச்சின் நிதி ஒதுக்கீடு குழு நிலை விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினர். [கூ - கே]

## வேலணையில் மூளைக்காச்சல்

வேலணை வெள்ளி

வேலணைப் பகுதியில் குழந்தைகளிடையே சின்னமுத்து நோய், மூளைக்காய்ச்சல் நோய் வேகமாக பரவி வருகின்றன

சென்ற வாரமும் இவ்வித நோய்களுக்குள்ளாகிய மூன்று குழந்தைகள் வேலணை மேற்குப் பகுதியில் பலியாகியுள்ளன.

## குண்டு வீச்சால் ஊழியர் மயக்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி

காங்கேசன்துறை ஹாபர் வியூ ஹோட்டல் இராணுவ முகாமிலிருந்து ஏவிவிடப்பட்ட இரு குண்டுகள் லங்கா சிமெந்து லிமிட்டெட் வளவுக்குள் வீழுந்து வெடித்ததால் அங்கு கடமையிலிருந்த ஊழியர்கள் மயக்கமடைந்த நிலையில் சிலமணி நேரம் இருக்க நேர்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன் தினம் பிற்பகல் இச்சம்பவம் இடம்பெற்றது.

வெடித்த இரு குண்டுகளும் கண்ணீர்ப் புகைக் குண்டுகளாக இருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## மரண அறிவித்தல்

### சண்முகம் சுந்தரம்

புளியங்கூடலைச் சேர்ந்த சண்முகம் சுந்தரம் 4-12 86ல் காலமாகிவிட்டார். அன்னார் செல்வத்தின் அன்புக்கணவரும், குணலெட்சுமி, சின்னப்பிள்ளை, விநாயகமூர்த்தி, செல்லம்மா, சதயலெட்சுமி, உலகநாதன், விசாகலெட்சுமி ஆகியோரின் அன்புத்தந்தையும், கந்தையா சோமசுந்தரம், சௌந்தரம், சுப்பிரமணியம், சின்னராசா, சரோஜினி மனோகரன் ஆகியோரின் மாமனாருமாவர் அன்னாரின் ஈமக்கிரியைகள் 4-12-86 அன்று வியாழக்கிழமை நடைபெற்றது.

(C 6180)

### செல்வன் இராசையா லவகுமார்

தோற்றம்: 12-04-1967    மறைவு: 02-12-1986



செல்வன் இராசையா லவகுமார் ஜெர்மனியில் அகால மரணமானார். இவர் மட்டுவில் திரு இராசையா திருமதி விமலதேவி இராசையா ஆகியோரின் அன்புமகனும் சாந்தி, உஷா, பிரதீபராஜ் ஆகியோரின் அன்புச் சகோதரனும், உரும்பராய் தெற்கு திரு ச. சபாரத்தினம் (கறுப்பையா) திருமதி ச அன்னம்மா ஆகியோரின் அன்புப் பேரனும் திரு ச கமலநாதன், திரு ச. விமலநாதன் ஆகியோரின் மருமகனுமாவார். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
உரும்பராய் தெற்கு    ச. கமலநாதன்.

(C 6194)

## மரண அறிவித்தல்

### திருமதி நாகம்மா நாகநாதி

புங்குடுதீவு மேற்கு 5-ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்டவரான திருமதி நாகம்மா நாகநாதி காலமானார். அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி நாகநாதியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஐயம்பிள்ளை அன்னபூரணிப்பிள்ளையின் அன்பு மகளும், நாகேஸ்வரி (ஜேர்மனி), நவரெத்தினராஜா (நவம்), நாகராஜா (கனடா), ராணி (பிரான்ஸ்), நகுலேஸ்வரன் (அமெரிக்கா), சரோஜாதேவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், இராமச்சந்திரன் (ஜேர்மனி), புவனேஸ்வரி, சித்ரா (கனடா), மகாலிங்கசிவம் (பிரான்ஸ்), அருளழகன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும், அசோக், சைலா, ஆனந்த், பிரதாப், இந்துஷா, ரஜீவன், சர்மிளா ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார் அன்னாரின் பூதவுடல் 06-12-86 சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு 'அன்னை இல்ல'த்திலிருந்து ஈமக்கிரியைகளுக்காக கொக்குவில் கிழக்கு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: நா. நவரெத்தினராஜா (நவம்)
"அன்னை இல்லம்",
ஆராய்ச்சியார் வளவு,
கொக்குவில் கிழக்கு.

(C-6195)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P O Box 49. Telegram, Eelanadu Telephone: 22389—24126